PUBLIC LIBRARY
JAFFNA

பொதுசன நூலகம்
நாவலந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

மலர் : 134
இதழ் : 03
பக்கங்கள் : 08
திகதி : 07.02.2010
விலை : 15.00/-

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

# பாதுகாவலன்
# Paathukavalan

யாழ் மறைமாவட்டத்தின் உத்தியோகபூர்வ கத்தோலிக்க பத்திரிகை

# வலி. வடக்கில் உள்ள தேவாலயங்களைப் புனரமைத்து வழிபட அனுமதிக்கவும்

## ஜனாதிபதியிடம் யாழ். ஆயர் கோரிக்கை



வலிகாமம் வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள பன்னிரண்டு கத்தோலிக்க தேவாலயங்களையும் புனரமைப்புச் செய்து மக்கள் வழிபடுவதற்கு திறந்து விட உரிய நடவடிக்கை எடுக்குமாறு யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ விடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இப்பிரதேச மக்கள் இடம் பெயர்ந்த பின்னர் இவ்வாலயங்கள் பராமரிப்பு இன்றியும் சேதமடைந்தும் உள்ளன. 1996ஆம் ஆண்டு இராணுவம் குடா நாட்டை கைப்பற்றிய பின்னர் இந்த ஆலயங்களில் சில ஆலயங்களுக்கு மக்கள் திருவிழா நாட்களில் சென்று வரவும் அனுமதி வழங்கப்பட்டது. அப்போது அந்த மக்கள் அவற்றைப் துப்பரவு செய்து வழிபாடுகளை நடத்தினார்கள். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு தற்போது பக்தர்கள் சென்றுவர அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதனால், அதன் அருகில் உள்ள வலிதூண்டல் புனித அன்னம்மாள் ஆலயம், சேந்தாங்குளம் புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்துக்கு மக்கள் சென்று வரமுடியும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. இவ்விரு ஆலயங்களை விட ஊரணி புனித அந்தோனியார் ஆலயம், பலாலி புனித செபஸ்ரியார் ஆலயம், வசாவிளான் கார்மேல் மாதா ஆலயம், ஒட்டகப்புலம் புனித மரியாள் ஆலயம், புனித யாகப்பர் ஆலயம், தோலகட்டி புனித மரியாள் ஆலயம், காங்கேசன் துறை புனித சூசையப்பர் ஆலயம், வளலாய் புனித மரியாள் ஆலயம் ஆகியவற்றை புனரமைத்து வழி படத் திறந்துவிட நடவடிக்கை எடுக்குமாறு ஆயர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பருத்தித்துறை புதிய தூய தோமையார் தேவாலய திறப்பு விழா - 30.01.2010



வடமராட்சி பருத்தித்துறையில் உள்ள புனித தோமையார் ஆலயம் தைமாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் திறக்கப்பட்டு நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் பழமைவாய்ந்த இந்தத் தேவாலயம் 1982ம் ஆண்டு அருட் திரு. றெஜி இராஜேஸ்வரன் காலத்தில் முற்றுமுழுதாக இடிக்கப்பட்டு பின்னர் இந்த ஆலயத்தை புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னாள் ஆயர் மறைமாவட்ட ஆயர் அதி.வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர் போர்ச் சூழல் மற்றும் இயற்கை அனர்த்தம் போன்றவற்றால் அப்பணி முழுமை பெறவில்லை. இதனைத் தொடர்ந்து பங்குத்தந்தையாக வருகைதந்த அருட்பணி. பி.எம். இம்மானுவேல் அடிகளாரின் முயற்சியினால் பீடப்பகுதி ஓரளவு முழுமை பெற்றது.

பின்னர் இப்பங்கு மக்கள் மற்றும் புலம்பெயர்ந்த உறவுகள் யாழ் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை போன்றோரின் உதவியினால் இவ்வாலயம் கட்டியெழுப்பப்பட்டது. அருட்திரு. றெக்னோ அடிகளாரின் முழு ஒத்துழைப்பினால் இவ்வாலயம் நிறைவுபெற்று பிரமாண்டமாக புதுப்பொழிவுடன் திகழ்கின்றது.

## எங்கே கடவுள் அழுகின்றார் என்னும் புதிய இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது

உலகம் முழுவதிலும் துன்புறுத்தப்பட்டு வேதனைகளை அனுபவிக்கும் திருச்சபை சமுகத்திற்கும் ஆறுதல் வழியை வழங்குவதற்கு என புதிய இணைய வலையமைப்பு (வெப் சயிற்) ஒன்று 25.01.2010 அன்று ஜேர்மனியில் உருவாக்கப்பட்டுள்ளது. உலகின் எல்லாப் பாகங்களிலும் உள்ளவர்களுக்கு உதவிக்கான பாதைகளை காட்டுவதே இதன் பிரதான நோக்கமாகும் என்று மாக் றேடிமன் Mark Riedemann தெரிவித்தார்..

"எங்கே கடவுள் அழுகின்றார்"- "Where God Weeps," என்னும் இந்த வலையமைப்பை "தேவையில் உள்ள திருச்சபைக்கு துணைபுரிதல்" என்னும் அமைப்பு கத்தோலிக்க வானொலி , தொலைக்காட்சியின் வலைப்பின்னலுடன் இணைந்து உருவாக்கியுள்ளது,

இந்த இணைய வலையமைப்பு இணைய வானொலி, தொலைக்காட்சி அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது விசேட அம்சமாகும் இணைய வானொலி, தொலைக்காட்சி உலகம் முழுவதிலும் விசுவாசத்திற்காக துன்புறும் கிறிஸ்தவர்களின் கதியை முக்கியத்துவப்படுத்தி வழங்குகின்றன.

இந்த வலையமைப்பின் உருவாக்க நாள் மிகவும் முக்கியமானது. ஏனெனில் புனித பவுல் கிறிஸ்தவர்களை துன்புறுத்தியதிலிருந்து மனமாற்றம் பெற்ற திருநாள் தினமாகும். பவுல் தான் துன்புறுத்திய திருச்சபைக்காக தன்னை அர்ப்பணித்த நாளும் இதே நாள்தான். இந்த வலையமைப்பினுடைய இலக்கும் நோக்கம் துன்புறும் திருச்சபைக்காக உழைப்பதே ஆகும். ஏன் இந்த வலையமைப்பின் பொறுப்பதிகாரியான மாக் றேடிமன் Mark Riedemann, explained விளக்கியுள்ளார். துன்புறும் திருச்சபையைப்பற்றி அறிந்து கொள்வதற்கு காத்திருக்கும் மக்களுக்கு முக்கிய வாய்ப்பை இந்த ஊடகம் அடித்தளம் இட்டுத் தருகின்றது என்றும் அவர்கள் எவ்வாறு இதற்குள் உள்வாங்கப் படலாம் எனவும் வழிகாட்டுகின்றது என அவர் மேலும் இங்கு சுட்டிக் காட்டினார்.

உலகில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும் பகுதிகளில் தினமும் வாழ்ந்து பணிபுரியும் பொது நிலையினர், துறவிகள், குருக்களின் நேரடி அனுபவங்களை தாங்கி இந்த வலையமைப்பு வருகின்றது.

ஒவ்வொரு மாதமும் கிறிஸ்தவர்கள கஸ்டங்களை, துன்புறுத்தல்களை அனுபவிக்கும் நாடுகளை மையப்படுத்தி ஆவணங்களையும் புள்ளிவிபரங்களையும் உண்மைச் சம்பவங்களையும் அப்பகுதியில் வசிக்கும் திருச்சபைத் தலைவர்களின் நேர்காணலையும் தாங்கி வரவுள்ளது.

மாக், றேடிமன் இந்த வலையமைப்பு உலகில் தற்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கெதிரான துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளது என்பதை உறுதியான ஆதாரமாக காட்டுவதை இலக்காக கொண்டுள்ளது என்றார் இந்த இணையத்தள முகவரி www.wheregodweeps.org அகும்.

## வன்னி மறைக்கோட்டத்தின் புதுக்குடியிருப்பு, மாத்தளன் நோக்கி யாழ் ஆயரின் ஆன்மீக விஜயம்



யாழ் ஆயரும் அவருடன் இணைந்த குருக்கள் சிலரும் 29.01.2010 அன்று வன்னி மறைக் கோட்டத்தில் உள்ள ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம், இரணப்பாலை, பச்சைப்புல்வெளி, மாத்தளன் ஆகிய பகுதிகளுக்கு சென்று கொடிய யுத்தத்தின் பின் எஞ்சியுள்ள எமது பங்கு ஆலயங்களுக்கு, குருமனைகள், கன்னியர் மடங்களை பார்வையிட்டனர்.

இதுவரை மக்கள் மீள குடியமர்த்தப்படாத இராணுவ வசம் உள்ள இப்பகுதிகளுக்கு இராணுவ உதவியுடன் இப்பயணத்தை மேற்கொண்டோம். இப்பயணத்தின் போது புதுக்குடியிருப்பு [illegible] ஆலயத்தின் தற்போதைய தோற்றமும், அவ்வாலய பங்கு பணி மனையின் உடைந்த தோற்றமும் மிக வேதனையை தந்தது. இராணுவத்தினரால் ஆயரின் வருகையை ஒட்டி ஆலயத்திற்கு செல்வதற்கான வழிகளும் ஆலயங்களும் துப்பரவாக்கப்பட்டு இருந்தன. [illegible]

(8ம் பக்கம் பார்க்க....)

## தயாராவோம்

அருளின் காலமான தவக்காலம் 17.02.2010 அன்று விபூதி புதனுடன் ஆரம்பமாகிறது என்பதை ஞாபகப்படுத்துகிறோம். செப, தப, தான தருமங்கள் மூலமாக எமது கிறிஸ்தவ வாழ்வை புதுப்பித்து இறைவனோடும், அயலவரோடும் நல்லுறவை ஏற்படுத்தும் காலமாக இக்காலம் அமைகிறது. எம் ஆன்ம வாழ்வை புதுப்பிக்க இறைவன் தரும் ஒரு புனித காலமும் இதுவே. எனவே திருப்பாடுகளின் தியானங்கள் மூலம் எம் உள்ளார்ந்த வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த தயாராவோம்.

"மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எழுது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

## குழந்தைகள்

சமூகத்தின் உயிர்நாடி, குடும்பத்தின் மிக உயர்ந்த சொத்து, இறைவனின் அன்புக்கொடை என்பதெல்லாம் உண்மைதான். ஏனெனில் குடும்பத்தின் சுமைகளை சுமப்பவர்களும், கல்விச்சாதனைகள் செய்பவர்களும், சமூகத் தலைவர்களும், திருச்சபையின் பணியாளர்களும், மக்களின் விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்பவர்களும் இவர்களிடமிருந்தே தோன்றுகிறார்கள். அந்தவகையில் சிறுவர்களின் பெறுமதி மிகவுன்னிப்பாக நோக்கப்படவேண்டியது அவசியம்.

சிறுவர்களின் வயது, அனுபவ முதிர்ச்சியின்மை, தங்கியிருக்கும் இயல்பு இவற்றைக் கருத்திற்கொண்டு அவர்கள் குறைத்துமதிப்பிடப்பட முடியாதவர்கள். முழுமனிதனுக்குரிய ஆளுமை – மனவளர்ச்சி – உணர்வுகள் ஆகியவற்றுக்கான அடித்தளம் குழந்தைப்பருவத்திலேயே இடப்பட்டு, அது வளர்ச்சிநிலையிலே இருப்பதால் சிறுவர்கள் மிகக்கவனமாகக் கையாளப்படவேண்டியவர்கள். (handle with care) இது உடையக்கூடிய கண்ணாடிப் பாத்திரங்களுக்கு மட்டுமல்ல, சிறுவர்களுக்கும் பொருந்தும்.

சிறுவர்களை ஒளி, களிமண், வெள்ளைத்துணி போன்ற பொருட்களோடு ஒப்பிடுவது வழக்கம். அந்த வரிசையில் இவர்கள் மறைத்துவைக்கப்பட்ட துல்லியமான கமராவுக்கும் (hidden camera)ஒப்பிடப்படக்கூடியவர்கள்.

பெற்றோர் பெரியோர்களின் பேச்சு, மூச்சு மறைவான – வெளிப்படையான செயல்கள் யாவும் இவர்களால் அமைதியாக உள்வாங்கப்படுகின்றன – கவனிக்கப்படுகின்றன. இவற்றைவிட பெற்றோரின் மனநிலை குழந்தைகளின் உருவாக்கத்தில் மிகப்பெரும் பங்குவகிக்கிறது. இதுவே குழந்தைகள் பெரியவர்களானதும் அவர்களுள் விசுவரூபமெடுக்கிறது. உள்வாங்கப்பட்டவைகள் நல்லவைகளாக இருந்தால், குடும்பமும் சமூகமும் அமைதியான, வளமான சூழலைப் பெற்றுக்கொள்கிறது. அதுவே தீமைகளாக இருந்தால் குடும்பமும் சமூகமும் அதன் பாதிப்பை பகிர்ந்துகொள்ளவேண்டியிருக்கிறது. இதையே 'அறுவடை சரியில்லையெனில் விதைப்புக்காலத்தை நோக்கு' என்ற பழமொழி உணர்த்துகிறது. அதனால்தான் குழந்தை வளர்ப்பு பணிநிலையானது மிகப்பொறுப்பு வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

காலத்துக்கு காலம் உலகிலே அணுகுமுறைகளிலே மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருப்பதை நாமறிவோம். கல்வியைப்பொறுத்தவரையில் தற்போதைய அணுகுமுறையில் பலமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. முன்னர் ஆசிரியர் மையக்கல்வியாக இருந்தன. இப்போது மாணவர் மையக்கல்வியாக மாறியுள்ளதுள். அதாவது ஆசிரியர் பாடநெறிகளைப் புகட்டுவதைவிட மாணவன் சுயமாக – இயல்பாக கற்பதற்கான சூழலை உருவாக்கிவிடுவதே இன்று முதன்மைப்படுத்தப்படுகிறது. இது பிள்ளைவளர்ப்பிற்கும் பொருந்தும். பெற்றோர் தமது விருப்புவெறுப்புக்களை அறிவுரைகளை பிள்ளைகள் மீது திணிப்பதைவிட, பிள்ளைகள் கல்வியும், நல்லொழுக்கமும் இறைபற்றும் கொண்ட சூழலில் இயல்பாக வளர வழிசமைப்பதே சரியான அணுகுமுறையாகும்.

உணவு, உடை, பாதுகாப்பு இவற்றோடு அன்புகலந்த அணுகுமுறையே பிள்ளைவளர்ப்பில் மிகஅவசியமாகத் தேவைப்படுகிறது. சாதாரண விடயங்களையும் பிள்ளைகளோடு பேசிப்பகிர்ந்துகொள்வது, தவறுசெய்தால் மன்னித்துவிடுவது, உணர்வுகளை, பருவமாற்றங்களைப் புரிந்துகொள்வது, பிள்ளைகளோடு உடனிருப்பது என்பனவே அன்பின் அணுகுமுறையாகும். இதன்மூலம் மட்டுமே பிள்ளைகளை நல்ல – சமூகத்திற்குகந்த பிள்ளைகளாக உருவாக்கமுடியும். தண்டனைகள் கண்டிப்புக்களை அதிகப்படுத்திக்கொள்வதால, பிள்ளைகள் மூடிய, மறைவான நிலைகளுக்குள் ஒழிந்து முகமூடிகளைப் போட்டுக்கொள்வதால் இயல்பான வளர்ச்சி குன்றிவிடுகிறது.

இன்று என் பிள்ளை ஏன் இப்படி? என்ற ஆதங்கமும், கவலையும், கண்ணீரும் கொண்ட பெற்றோரும் பெரியோரும் எம் குழந்தைகள் வளர்ப்புபற்றி ஓர் ஆத்தும சோதனை செய்துகொள்வோமா?

# வள(னா)ர் பப்பா பதில்கள்



**1. கேள்வி: அன்புள்ள வளனாரே வணக்கம்! 'நாற்பது' என்ற எண் விவிலியத்தில் வெளிப்படுத்தும் கருத்து யாது?**

*சேவியர் ஊர்காவற்றுறை*

பதில்: நாற்பது என்பது தூய்மைப்படுத்தும் காலமாகவும், தயாரிப்பின் காலமாகவும் அமைகிறது. நோவாவின் காலத்தில் 40 நாள்கள் பெய்த மழைவெள்ளத்தால் உலகம் தூய்மைப்படுத்தப்பட்டது. 40 நாள்கள் கடவுளோடு தனித்திருந்து, செபித்திருந்து, விழித்திருந்து பத்துக்கட்டளையைப் பெற்றுக்கொண்டார் மோசே. நினிவே மக்கள் 40 நாள்கள் நோன்பிருந்து பாவமன்னிப்பு பெற்றனர். இயேசு 40ம் நாள் யெருசலேம் தேவாலயத்தில் காணிக்கையாகக்கொடுக்கப்பட்டார். திருமுழுக்கின்பின் 40 நாள்கள் பாலைவனத்தில் இருந்தார். உயிர்ப்பின் பின் 40 நாள்கள் சீடரோடு தங்கியிருந்தார். இன்றும் ? ரோமை திருச்சபையில் தவக்காலம் 40 நாள்கள். (இப்படியே கூறிக்கொண்டுபோனால் 40 பக்கத்தில் தான் பாதுகாவலனும் அடிக்கவேண்டியிருக்கும்)

**2. கேள்வி : வளனாரே, இறந்த உடலை அடக்கம் செய்வதுதான் திருச்சபையின் மரபு. ஆனால் இறந்த சில கிறிஸ்தவர்களின் உடலை கொண்டு வர முடியாத காரணங்களுக்காக அதை எரித்து சாம்பலாக கொண்டு வந்து அடக்கம் செய்வது திருச்சபை சட்டத்திற்கு முரணானது இல்லையா?**

*ஆகிலா நாவாந்துறை*

பதில்: உமது கேள்வியிலேயே விடை உண்டே. பொதுவாக உடலை அடக்கம் செய்யும் வழக்கத்தையே திருச்சபை பரிந்துரைக்கிறது. எனினும் திருச்சபைக் கோட்பாட்டுக்கு எதிராக இல்லாத சிலகாரணங்களுக்காக திருச்சபை அனுமதி வழங்கலாம். (அம்மாடி எப்படியெல்லாம் கேள்வி கேட்கிறாங்க. உட்கார்ந்து யோசிப்பாங்களோ)

**3. கேள்வி: அன்புடன் வளனாருக்கு, ஒருவர் பங்குக் குருவாக இருப்பதற்கான தகுதி என்ன?**

*அருள்மதி யாழ்ப்பாணம்*

பதில்: திருச்சபைக் கோட்பாடுகள் அறிந்தவராகவும் ஒழுக்கநெறி உள்ளவராகவும் மனிதம் சார்ந்த நற்பண்புகளை கொண்டவராகவும் ஆன்மதாகம் உள்ளவராகவும் மேய்ப்புப்பணியார்வம் கொண்டவராகவும் இருக்கவேண்டும் (முதலில் குருப்பட்டம் பெற்றிருக்கவேண்டும்)

**4. கேள்வி: வளனாரே, பங்குகளில் நற்கருணைப் பணியாளர்கள் ஏற்படுத்தப்படும் பேச்சு அடிபடுகிறதே. பொதுநிலையினர் நற்கருணையைத் தொடலாமா?**

பதில்: இயேசுவின் காலத்திலேயே ஆதித்திருச்சபையில் இப்பணியாளர்கள் ஏற்படுத்தப்பட்டனர். "நன்மதிப்புபெற்ற எழுவரைத்தேர்ந்தெடுத்தனர்" என்கிறது திருத்தூதர் பணிகள் நூல். அவர்களும் திருமணமாகி குடும்பவாழ்வில் ஈடுபட்டவர்கள் தான். புனிதமான திருப்பலிகளில் அவர்களும் பங்கெடுத்தனர். ஆகவே பொதுநிலை விசுவாசிகள் நற்கருணைப் பணியாளராவதற்கு எந்த தடையுமில்லை. (இராயப்பரின் காலையே இயேசு கழுவினார் என்றால் அந்த இயேசுவை நாம் தொட்டால் என்னப்பா? அய்யோ அய்யோ)

**5. கேள்வி: வளனாரே, நடந்து முடிந்த தேர்தல் பற்றி என்ன நினைக்கிறீர்?**

*கமில்றன் சாவகச்சேரி*

பதில்: operation success but patient died என்று ஆங்கிலத்திலே ஒரு கூற்று இருக்கிறது. அதாவது "சத்திரசிகிச்சை வெற்றி ஆனால் நோயாளி இறந்துவிட்டார்." இதைத்தான் நினைக்கிறேன்

**(பதில் வளரும்...)**

# சிந்தனைத் தூறல்கள் – 06

## வாழ்க்கை ஒரு கணம்

அறுபது வயது நிறைந்தவர்கள் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடுகிறார்கள்.

அவர்கள் இந்த உலகத்தில் அறுபது ஆண்டுக் காலம் வாழ்ந்ததாக நினைத்துக் கொள்கிறார்கள்.

இதைவிடப் பெரிய மூடநம்பிக்கை வேறொன்று இருக்க முடியாது. உணர்வோடு விழித்திருப்பதற்குப் பெயர்தான் வாழ்க்கை.

சராசரி மனிதன் தன் ஆயுளில் பாதியைத் தூக்கத்தில் கழித்துவிடுகிறான். தூக்கம் ஒரு தற்காலிக மரணம். எனவே அதை வாழ்க்கைக் கணக்கில் சேர்க்க முடியாது.

ஆயுளில் பாதி நேரம் விழித்திருக்கிறோமே, அப்போது வாழ்கிறோம் அல்லவா என்று கேட்கலாம்.

இல்லை, அப்போதும் நாம் வாழ்வதில்லை.

விழித்திருப்பது வாழ்தல் அல்ல; உணர்வோடு விழித்திருப்பதுதான் வாழ்தல்.

இறந்த பிறகு கூடக் கண் விழித்திருக்கத்தான் செய்கிறது.

உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஒரு சராசரி மனிதன் ஆயுளில் ஒரு கணம் அல்லது இரு கணம்தான் உணர்வோடு விழித்திருக்கிறான்.

உணர்வோடு விழித்திருப்பது என்பது மனமும் உடலும் ஒன்றி இருப்பது.

பெரும்பாலும் மனம் நம் உடலில் அதாவது நாம் செய்யும் செயலில் இருப்பதில்லை.

அது 'ஊர்' சுற்றப் புறப்பட்டுவிடுகிறது.

நம் செயல்களில் பலவற்றை நாம் பழக்கத்தால் இயந்திரம் போல் செய்கிறோம். மனம் அவற்றில் இருப்பதில்லை.

நான் சவரக் கத்தியால் சவரம் செய்யும் போது என்னைப் பிடித்த வலது கையில் எடுத்து வைத்துக் கொண்டு என்னையை இடக் கையில் ஊற்றுவேன்.

'பவுடர்' போடும்போது பவுடர் டப்பாவை இடக் கையில் வைத்துக்கொண்டு பவுடரை வலக் கையில் கொட்டுவேன்.

இது நெடுநாள் பழக்கம். இதை உடல் இயந்திரம் போல்தானே செய்யும். ஒருநாள் பவுடர் டப்பாவை எடுக்கக் கை நீட்டியபோது சட்டென உணர்வோடு விழிப்பு நிலை வந்து விட்டது.

ஏதோ ஒன்றை யோசித்து எங்கோ சுற்றிக்கொண்டிருந்த மனம் உடலுக்குள் வந்துவிட்டது.

சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்.

பவுடர் டப்பாவை வலக் கையில் எடுத்து இடக் கையில் போடுவதா, இடக் கையில் எடுத்து வலக் கையில் போடுவதா என்று ஒரே குழப்பம்.

நெடு நேரம் குழம்பிக்கொண்டிருந்தேன். உணர்வு வரும்போதெல்லாம் இந்தக் குழப்பம் இன்னும் நீடிக்கிறது.

இரு சக்கர வாகனத்தில் வழக்கமான பாதையில் செல்லும் போதும் மனம் என்னிடம் இருப்பதில்லை.

சிறிதுநேரம் கழித்து விழிப்பு வரும். அப்போது நெடுந்தூரத்தை நான் உணர்வின்றியே கடந்திருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைவேன்.

எனக்குத் தூக்க வியாதி இருப்பதாக நினைத்துக் கொள்ளாதீர்கள்.

இந்தத் 'தூக்க' வியாதி எல்லோருக்கும் உண்டு.

நாம் விழித்துக்கொண்டே தூங்குகிறோம்

(தூறல் தொடரும்...)

# அப்துல் ரகுமானின்

## சிறகுகளின் நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நிமிடக்கதை

## அந்தோனி டி மெல்லோ

ஆன்மீகம் என்பது உயர் மட்ட மக்களுக்கு மட்டுமே உரித்தானது. ஒரு முறை ஒரு பெருங் கூட்டம் தன்னைப் பின் தொடர்ந்து வரும் போது இயேசு நாதர் கூறியது :

ஒரு பெரிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான செலவைப் பற்றி உத் தேசிக்காமல், அதனைக் கட்டி முடிப்பதற்கு உங்களில் யாரேனும் விரும்புவீர்களா? பத்தாயிரம் வீரர்களை கொண்ட ஒரு மன்னன், இருபதாயிரம் வீரர்களை கொண்ட மன்னனுடன் மோதுவானா? தன்னுடைய படையின் வலிமையைக் கருத்திற் கொண்டு, எதிரி நாட்டு மன்னனிடம் அவன் தன் தூதுவர்களை அனுப்பி, சமரசம் செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுகிறான். அதனால் உங்கள் உடைமைகள் அனைத்தையும் துறக்கத் தயாராக இருந்தால் ஒழிய, நீங்கள் என்னிடம் சீடராக வர இயலாது.

**சிந்தனை:- மக்கள் உண்மையை விரும்புவதில்லை. அவர்கள் பிரதிபலனுக்குத்தான் ஆசைப்படுகிறார்கள்.**

# உறவுக்கள் - ஜன்னல்

மழையின் ஓசைக்குச் செவிமடு...
இந்த ஓசையோடு உனக்குத்
தொடர்பான
எண்ணங்கள் யாவை..?
என்ன நினைவுகள்?
விண்ணிலிருந்து வரும் இந்த
ஆசீரில் மரங்கள் தோயும்
போது அவற்றின் அனுபவங்களைப்
பார்..
இலைகளைப்பார்...
பறவைகள் மழையை அனுபவிப்
பதைப் பார்
வாழ்வு பெறும் புதிய
இலைகளைப் பார்...
மழை இல்லாமல் இருந்திருந்தால்
இன்னும் சிறிது காலம்
மரங்களில் இருந்திருக்கும் முற்றிய
இலைகளைப் பார்...
மேகங்களைப் பார்...
அலை எங்கிருந்து வருகின்றன...
எங்கே செல்கின்றன..
அலைகளின் தோற்றத்திலிருந்து
மறைவு வரை அலைகளின் பயணத்
தைப் பார்...
வரண்ட பூமியில் விழும்
மழைத்துளிகளைப் பார்....
மரங்களில்....
கூரைமீது....
உருவமற்ற நிலையில் அவை
ரோஜாக்களில் இருப்பதைப் பார்....
அவைகள் வடிவமும் தனித்து
வமும் பெற்று, நிலத்தில்
விழுந்து தங்களை இழப்பதைப்
பார்...
உனது ஜன்னலில் உள்ள
மழைத் துளிகளைப் பார்...
அவை தனித்து நிற்கின்றன....
பின், சேர்ந்து ஓடி
மற்றத்தனித்துளிகளையும்
இழுத்துச் செல்கின்றன.....
இதே நிலைதான் மேகங்களுக்கு
மரங்களுக்கு,
இலைகளுக்கு,
பறவைகளுக்கு,
விலங்குகளுக்கு,
மனிதர்களுக்கு
உனக்கு நிகழ்வதைப் பார்....
நாம் தனித்து நிற்கின்றோம்....
வாழ்வின் ஓட்டத்தில் இழுக்கப்பட்டு
அழைத்துச் செல்லப்படுவதற்காக....

# உனக்குத்தான் எழுதுகின்றேன்

* மகிழ்ச்சியாய் இரு. நேரம் உன்னுடையது.
* மகிழ்ச்சியோடு பிறரை வாழ்த்து.
* அவர்களைச் சிரிக்கச் செய்.
* வருத்தத்தோடு இராதே.
* எப்பொழுதும் முகமலர்ச்சியோடு இரு.
* மகிழ்ச்சியான இதயத்தோடு கடவுளுக்கு வாழ்த்துப் பாடல்கள் பாடு.
* குழந்தைகளோடு விளையாடு. அவர்களோடு இருப்பதில் மகிழ்ச்சி கொள்.
* நல்ல நண்பர்களோடு சிரித்து மகிழ்.
* நற்செயலை மகிழ்ச்சியோடு பாராட்டு.

# வழியோரக் கனவுகள்

## எது தர்மம்

வெகு தூரம் நடந்து களைப்பும், பசியும் தாகமும் வாட்டி எடுக்க மயங்கி விழுந்தான். ஒரு வழிப்போக்கன் அவனை எழுப்பி தன் சோற்றில் பாதியைக் கொடுத்தான். பசி பறந்தது. பிறகு வழிப்போக்கன் தன் குடுவையைத் திறந்து அவனுக்குக் குடிக்கக் கொடுத்தான். தூரத்தில் கிணற்றைப் பார்த்துவிட்டு, "நான் உங்களிடம் பிச்சை வாங்க விரும்பவில்லை" என்றான். அந்த வழிப்போக்கன் கோபத்துடன், "அப்போது சோறு வாங்கிச் சாப்பிட்டியே அது பிச்சையில்லையா?" என்று கேட்டான்.

உடனே அந்த ஆள், "கோபப்படுகிறீர்களா என்னால் முடியாத நிலையில் மயங்கி விழுந்தேன். நீங்கள் எழுப்பி சோறு கொடுத்தீர்கள் நான் அதை வாங்கிச் சாப்பிட்டேன். அது தர்மம். இப்போது எனக்கு உற்சாகம் வந்துவிட்டது. அதோ தூரத்தில் இருக்கின்ற கிணற்றில் நானே நடந்து போய் தண்ணீர் குடிக்க முடியும். அதற்காக சோம்பேறித்தனப்பட்டு உங்களிடம் வாங்கிக் குடித்தால் அது தர்மம் இல்லை. பிச்சை எடுக்கிற மாதிரித்தான் இருக்கும் என்றான்.

**சிந்தனை : - இயலாத நிலையில் கையை நீட்டுவது தர்மம். இயன்றும் நீட்டிக்கொண்டிருப்பது பிச்சை.**

**"உன் சகோதரர்களில் ஒருவன் ஏழையாய் போனால், நீ அவன் மட்டில் உன் இதயத்தை கடினப்படுத்தாமலும் உன் கையை சுருக்கிக்கொள்ளாமலும் அந்த ஏழைக்கு தாராளமாய் திறந்து அவனுடைய தேவைக்கு ஏற்றால் போல் கடன் கொடுப்பாயாக"**

# வாய்ப்பு

வாய்ப்பு என்பது எப்போதுமே
நமது கால்களுக்குக் கீழேயே உள்ளது
நாம் இதைத் தேடி வேறெங்கும் போகவேண்டியதில்லை
நாம் செய்ய வேண்டியதெல்லாம்
அந்த வாய்ப்பைக் கண்டுணர்வதேயாகும்.
வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்
முன்னேற்றம் தேடி வரும் வாய்ப்பினை
எப்படிக் கண்டுணர்வது என்று தெரியாதவர்கள்
அந்த வாய்ப்பு அவர்களது கதவைத் தட்டும்போது
அந்தச் சத்தத்தைப் பற்றிக்
குறை கூறிக்கொண்டிருப்பார்கள்.

# வெற்றிப் படிகள்



## மனிதனா? கடவுளா?



ஒரு விவசாயி பாழடைந்திருந்த தன் வயலை மன நிறைவோடு சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தான். பக்கத்து வயல்களை விட பசுமையாக எடுப்பாக பயிர்கள் வளர்ந்திருந்தன. அந்த வழியே வந்த முதியவர் அவனைப் பாராட்டினார். "கடவுள் உங்கள் உழைப்பிற்கு நல்ல பலனைக் கொடுத்திருக்கிறார்" என்று சொன்னார்.

விவசாயிக்கு கோபம் வந்து விட்டது. "கடவுள் என்ன செய்தார்? நான் இவ்வளவு உழைத்திருக்கின்றேன். சுற்றியுள்ள வயல்களைப் பாருங்கள். அவர்கள் உழைக்கவில்லையா! நான் உழைத்திருக்கின்றேன் அதுதான் வேறுபாடு என்றார். முதியவர் அமைதியாக நீங்கள் சொல்வதே சரி என்று ஒத்துக் கொண்டு விடை பெற்றார்.

சில வாரங்களுக்குப் பிறகு அதே முதியவர் வயலருகில் அதே விவசாயியைப் பார்த்தார். "உங்கள் உழைப்பால் பயிர்கள் நன்றாக இருக்கிறதல்லவா? என்று பணிவோடு கேட்டார். இப்போது விவசாயி அலுத்துப் போன குரலில் சொன்னார். "என்ன உழைத்து என்ன பயன்? மேல் மழையில்லை பூச்சி தாக்குகிறது மருந்து அடித்தும் பயனில்லை. கடவுள் தான் கண்திறக்கவில்லை.

விவசாயியின் வேதனையை உணர்ந்து கொண்ட பெரியவர் ஆறுதலாகச் சொன்னார். "நீங்கள் உழைக்காவிட்டால் கடவுள் உங்களுக்கு எதுவும் தரமுடியாது! கடவுள் உங்களோடு இல்லாவிட்டால் உங்கள் உழைப்பு முழுமையான பயன் தராது. எனவே கடவுளை உங்கள் கூட்டாளியாக வைத்துக் கொள்ளலாமே என்றார்.

**சிந்தனை :- நீங்கள் உழைக்கா விட்டால் உங்களுக்கு எதுவும் தர முடியாது. கடவுள் உங்களோடு இல்லா விட்டால் உங்கள் உழைப்பு முழுமையான பயன்தராது.**

# பிரச்சினை

உங்களால் கையாளமுடியாத சூழ்நிலைகளை எதிர்கொண்டால் அவற்றைப் பிரச்சினைகள் என்று முத்திரை குத்திவிடுகிறீர்கள் உண்மையில் பிரச்சினை என்பது வெளியில் இல்லை உங்கள் மனதில்தான் இருக்கிறது. நம்முடைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நாம் வெளியில் தேடுகிறோம். பிரச்சினைகள் நமக்குள்ளேயே இருக்கும்போதுதீர்வுகள் கிடைக்கும் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வது என்பது 'பிரச்சினை என்பதே இல்லை'என்பதை உணர்ந்து கொள்வதுதான். தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளத் தெரியாத பலர் மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் புறப்பட்டு விடுகிறார்கள். பிரச்சினைகள் தான் ஒரு மனிதனைப் புடம் போட்டுப் பிரகாசிக்க வைக்கிறது.

# தீ பி ள ம் பு

## கஞ்சன்

ஒரு கஞ்சன் வியாபாரம் செய்தான். வியாபாரத்தில் பெரிய நஷ்டம் ஏற்பட்டு முதலும் போய் விட்டது. அதை அவனால் தாங்க முடியவில்லை. இனி உலகிலே வாழவே வேண்டாம் என்ற முடிவுடன் கயிற்றை கட்டி தூக்கில் தொங்கினான். அதையும் சரியாக செய்யாததால் அரைகுறை உயிருடன் கத்தினான். வேலைக்காரன் ஓடி வந்து தூக்குக் கயிற்றை அறுத்து அவனைக் காப்பாற்றினான்.

நான் பிழைத்ததுகூட பெரிதாகத் தோன்றவில்லை அந்த கஞ்சனுக்கு. வேலைக்காரன் கயிற்றை அறுத்து அந்தக் கயிற்றை வீணாக்கி விட்டானே என்ற கோபம். "நீ கயிற்றை அறுத்து பாழாக்கி விட்டாய். உடனே கயிற்றின் விலையைக் கொடு அல்லது உன் சம்பளத்தில் பிடித்துக்கொள்வேன்" என்றான.

**சிந்தனை :- ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சிக்குடிப்பவர்கள் அவர்களுக்கு போடப்படும் ஊசிக்கு பணம் கொடுத்து என்ன பயன்?**

**"மனிதர்முன் நீதிமான்களாகக் காட்டிக் கொள்ளுகிறவர்கள் நீங்கள் தாம்.**

**கடவுளோ உங்கள் உள்ளங்களை அறிவார்". லூக்காஸ் 16:15**

# பாதை இங்கே... வழியில் கல்

ஒருவர் தெரு வழியாக நடந்து வந்து கொண்டிருந்தார். இருள் நேரம். வழியில் ஒரு பெரிய கல் கிடந்தது. தூக்கிப்பார்த்தார் முடியவில்லை. மிகவும் பாரமாக இருந்தது. இன்னும் ஒருவர் சேர்ந்தால்தான் தூக்கமுடியும். உடனே வீதியோரமாக மரத்தடியில் உட்கார்ந்து யாராவது வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தார். ஒருவர் வந்து என்ன இந்த நேரத்தில் இங்கே இருக்கிறீர்கள் என்று கேட்டார். அங்கே அந்த கருங்கல் அதை சுட்டிக் காட்டினார். அதை தூக்கி ஓரமாக போட வேண்டும். வாருங்கள் இருவரும் சேர்ந்து தூக்கலாம் என்றார் வந்தவர். நான் அதற்காக உட்காந்திருக்கவில்லை ஒரு மனுசன் கருங்கல்லில் காலை இடித்துக் கொண்டால் எப்படித் வேதனைப்படுவான் என்று பார்க்க எனக்கு நிறைய நாள் ஆசை. அதற்காகத்தான் உட்கார்ந்திருக்கிறேன் என்று கூறினார். அடுத்தவர்களின் துன்பத்தைப் பார்த்து ஆனந்தப்படுபவர்கள்தான் இவ்வுலகில் அதிகம்.

**சிந்தனை:-**

**"எல்லாவற்றிற்கும் மேலாக அன்புடைய கொண்டிருங்கள். அதுவே எல்லா நற்பண்புகளையும் பிணைத்து நிறைவு பெறச்செய்யும்."**

# கவிதை எழுதினேன்

## எதிரியைத் தேர்ந்தெடுக்க...

எனது எதிரியை
நான் சரியா தேர்வுச் செய்யும்
கலையினை கற்றுத்தா...!
என்னை எதிர்ப்பவரெல்லாம்
எனது எதிரிகளல்ல...
என்பதனைக் கற்றுத்தா..!
எனது சிந்தனைகளை
தெரிந்தோ தெரியாமலோ:
அறிந்தோ, அறியாமலோ:
புரிந்தோ புரியாமலோ...
ஏற்றுக்கொள்ளாதவரெல்லாம்
எனது எதிரிகளல்ல...
என்பதனைக் கற்றுத்தா...!
என்னை ஆதரிக்காதவர்கள்...
என்னை ஆற்றுப்படுத்தாதவர்கள்...
என்னை ஆரவாரிக்காதவர்கள்...
என்னை ஆசீர்வதிக்காதவர்கள்...
இவர்கள் அல்ல- மாறாக-
அடிப்படையில்
எனது எதிரி நானே என்பதனை
அறுதியுடன்
ஆய்ந்தறிந்து தேர்வுக் கொள்ளும்
அனுபவங்களை
அதிகமாகவே தா!

# கிறிஸ்து வழி வாழ்வு



### தாமஸ் அ. கெம்பிஸ்

## அமைதிப்படுத்தும் நல்ல மனிதன்

* "முதலில் உன்னை அமைதியில் காத்துக்கொள்; அப்போதுதான நீ பிறரை அமைதிப்படுத்த முடியும்".
* நலமறிஞனைவிட அமைதிப்படுத்தும் மனிதனால் மிகுந்த பயனுண்டு.
* தீய நாட்டமுடைய மனிதன் நல்லதையும் தீயதற்கு இழுக்கிறான்; தீயதையும் எளிதில் விசுவசிக்கிறான்.
* அமைதிப்படுத்தும் நல்ல மனிதன் அனைத்தையும் நல்லனவாக மாற்றிவிடுகிறான்.
* பிறர் எதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணி தெளிவான். ஆனால், தான் செய்ய வேண்டியதை கருத தவறுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருக்கள் ஆண்டு ஜூன் 2009 - ஜூன் 2010

## இறை அழைத்தலுக்குப் பெற்றோரின் பங்களிப்பு

அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம்

அன்புப் பெற்றோரே! "எம் மேற்றாசனத்தில் வாழும் 33,200 கத்தோலிக்க குடும்பங்களிலிருந்து ஆண்டவர் இயேசுவின் குருத்துவ அழைத்தலைப் பின்பற்ற இந்த 2009ம் ஆண்டில் புனித மடுத்தீனார் குருமடத்துக்கு 30 இளைஞரே முன் வந்துள்ளனர். இந்த 30 இளைஞர்களின் பின்புலம் 30 உத்தம கத்தோலிக்க விளைநிலங்களான குடும்பங்களாகும். குடும்பங்கள் தான் இறை அழைத்தலின் விளைநிலங்கள். ஒரு பங்கின் வளர்ச்சியை அப்பங்கிலுள்ள தேவ அழைத்தலைக் கொண்டுதான் தீர்மானிக்கின்றோம். ஒரு குடும்பமும் அப்படியே சில குடும்பங்களில் ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்தின் நாலுபேர் குருக்கள் துறவிகளாய் இருப்பது விசுவாச உயர்நிலையைக் காட்டுகின்றது. ஆண்டவரின் திருச்சட்டம் ஊக்குவிப்பது போன்று உங்கள் குழந்தைகளில் ஒன்றை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க இந்த இறைமகனின் இல்லத்திற்கு கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள். அன்று "சென்றுவா மகனே வென்றுவா" என்று வீரத்துடன் தன் மகனை போர்க்களத்திற்கு அனுப்பி வைத்த மறவ குலத்துத் தாய்போன்று இன்று இறைவனுக்காக உங்கள் பிள்ளைகளை அர்ப்பணிக்கும் நோக்கத்துடன் குருமடம் அனுப்பி உள்ளீர்கள். இந்த அர்ப்பண மலர்கள் காயாகிக், கனியாகி இறைவனின் திராட்சைத் தோட்டத்திலும், வயல்களிலும் சிறப்புப் பணி செய்வதை ஒரு நாள் கண்டு மகிழ்வது உங்கள் வாழ்வின் நிறைவான ஆனந்தமாகும். ஈன்ற பொழுது பெரிதுவக்கும் தன் மகனை சான்றோனாக எனக்கேட்ட தாய். குருப்பட்டம் எடுக்கப்போகும் குழந்தைச் செல்வங்களுடைய அன்புப் பெற்றோராகிய உங்களுக்கு நான் சொல்லும் வார்த்தை. குருப்பட்ட நாளிலே உங்கள் மகிழ்ச்சியை நினைத்துப் பாருங்கள். ஆனந்தக் கண்ணீர் வடிய அந்த அன்பு மகனை கட்டி அணைத்து முத்தம் கொடுக்கும் நேரத்தை ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்கள்.

இதற்கு உதவியாகவே, இந்த புனித மடுத்தீனார் சிறிய குருமடம் இயங்குகிறது. இங்கு நடைபெறும் உருவாக்கத்தில் எம் பங்கும், உங்கள் ஒத்துழைப்பும் ஒன்றிணைந்து முன்னெடுத்தலை ஆராய்வதே இந்த சிறிய ஆக்கத்தின் நோக்கமாகும். சென்ற மாதம் நடைபெற்ற பட்டிமன்றம் "எதிர் காலக் குருக்களின் வாழ்வில் சிறந்த பங்காற்றுவது எது? குடும்பமா? குருமடமா? என்ற தலைப்பில் இருந்தது. இதற்கு பெற்றோர் நீங்கள் என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

உங்களுடைய குடும்பத்தில் நீங்கள் பெற்றெடுத்த குழந்தைகளை கல்விக்கூடங்களுக்குப் பின் உயர்பாடசாலைகளுக்கு, தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் அதன் பின் தகுந்த வேலை வாய்ப்பினைத் தேடி, தொழிலில் முன்னேறி தங்கள் சொந்தக் காலில் நின்று நல்ல குடும்பத் தலைவர்களாக வளர்ச்சியுறுவதைக் காண்பதே உங்கள் வாழ்க்கை கனவுகளின் எதிர்பார்ப்பாகும். "ஈன்ற பொழுது பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்", வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி பசியிருந்து பட்டினி கிடந்து இரவுபகலாக கண்விழித்து காத்த எம் செல்வங்கள் இன்று ஒரு நல்ல நிலையில் இருக்க வேண்டுமென்பதே எங்கள் வாழ்க்கையின் ஒரே ஆசை. ஆனால், இங்கு அனுப்பப்பட்டிருக்கும் உங்கள் மகன் முற்றிலும் மாறுபட்ட ஒரு அழைப்பை பெற்றவனாக வளரப் போவதை நீங்கள் அவதானிப்பீர்கள். அவன் ஒரு வெற்றிகரமான தொழிலையோ உலக அந்தஸ்தையோ நோக்கி நடவாமல் மறைபொருளான ஆண்டவரின் ஒரு அழைப்பை ஏற்று கிறிஸ்துவோடு பயணிப்பவன். வாழ்க்கை நிலைகளில் எல்லாவற்றிலும் மேலான, உன்னதமான வாழ்க்கை நிலை குருத்துவமாகும். புனித அகஸ்தீனார் கூறுவது போல சம்மனசுகளுக்கு மேலான, உன்னதமான வாழ்க்கை நிலை குருத்துவமாகும். புனித அகஸ்தீனார் கூறுவது போல சம்மனசுகளுக்கு மேலான நிலையிலே இருந்து "இது என் சரீரம் இது என் இரத்தம்" என்று சொல்லும்பொழுது ஆண்டவருடைய சரீரமாகவும், ஆண்டவருடைய இரத்தமாகவும் மாற்றும் வல்லமையைக் கொண்டவர்கள் குருக்கள். ஆண்டவரையும் குருக்களையும் தவிர வேறு எவருமே பாவங்களை மன்னிக்கின்ற அதிகாரத்தை கொண்டவர்கள் குருக்கள் மட்டுமே. உலகத்தைப் படைத்து பராமரிக்கும் அந்த வல்லமை நிறைந்த இறைவனை தன்னுடைய சொந்தக் கைகளில் ஏந்தி மற்றவருக்கும் கொடுக்கும் மாபெரும் பாக்கியத்தை பெற்றவர்கள் எம் குருக்கள். பெற்றெடுத்து அன்போடும் பாசத்தோடும் வளர்த்த நீங்கள் கடவுளிடம் செல்ல வேண்டிய நேரத்திலே, அருகிலே இருந்து ஆறுதல் கூறி நோயில் பூசுதலைத் தந்து உங்களை அசையாத நம்பிக்கையோடு ஆண்டவர் சந்நிதானத்துக்கு வழி அனுப்பி வைப்பவர்கள் தான் குருக்கள். நீங்கள் இவ்வுலகை விட்டு சென்ற பின் தங்கள் நாளாந்த திருப்பலியிலே நீங்கள் மோட்சம் செல்லும் வரையும் ஆண்டவரைப் பார்த்து அயராது மன்றாடிக்கொண்டிருப்பவர்கள் உங்கள் குருக்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையை நீங்கள் பெற்று வளர்த்த உங்கள் சொந்தப் பிள்ளை அடைவதைக் காணும் அந்த மாபெரும் மகிழ்ச்சி நிறைவை விட வேறு என்ன மகிழ்ச்சி, மனநிறைவு உங்கள் வாழ்க்கையில் இருக்கமுடியும்? ஆனால் இந்த நிலையை அடைவது ஒரு கடினமான பாதை இக் கடினமான பயணத்தில் கல்வாரி மட்டும் செல்கின்ற மரியாள் போன்று தாயும், தகப்பனும் பயணிக்க வேண்டிவரும். ஆகையினால்தான் இந்தக் குருத்துவத்தின் மறைபொருளை நீங்கள் புரிந்து கொள்ள உங்கள் குடும்பசெபமாலையில், இறை வார்த்தை தியானத்தில், அன்புக்குழும வாழ்வில், பிறர்நல சேவையில் அனுதினமும் வளர வேண்டும். இன்றைய உலகிலே மூன்றாம் மிலேனிய காலகட்டத்தில் கத்தோலிக்க குருத்துவம் எதிர்நோக்கும் பாரிய சவால்களை நீங்கள் அறியத் தொடங்கியிருப்பீர்கள். ஒரு குருவானவர் அறையிலே இருந்தால் இவர் எந்த நேரமும் அறையிலே தான் இருப்பார். இவருக்கு வேலை செய்யத் தெரியாது என்பார்கள். வெளியிலே சென்று ஓடியாடி வேலைசெய்தால் சுவாமியாரை அறையிலே காணமுடியாது. இந்தக் காலத்து சுவாமிமார் இப்படித்தான் என்பார்கள். பிரசங்கம் சிறியதாய் இருந்தால் இவருக்குப் பிரசங்கம் சொல்லத் தெரியாது என்பார்கள். பிரசங்கம் ஐந்து நிமிடம் நீண்டு விட்டால் "இவைக்கென்ன? பூசை முடியச் சாப்பிட்டுவிட்டு இருப்பினம். எங்கட வாழ்க்கைப்பிரச்சனை நேரப்பிரச்சனை, இவைகளுக்கென்ன விளங்கும்." என்பார்கள். ஒட்டுமொத்தமாக சுவாமிமார் செய்வது எல்லாமே எங்களுக்குச் சரியில்லாமல்தான் இருக்கிறது. ஆனால் இந்த சுவாமி இறந்துபோனால் இந்த சுவாமியினிடத்தை எடுக்க வேறு எவரும் இல்லை. அவருடைய செத்தவீட்டில் "எவ்வளவு அருமையான ஒரு சுவாமி செத்துவிட்டார்" என்று எல்லாரும் சொல்லி அழுவார்கள். இதுதான் குருக்கள் இவ்வுலகிலே பெற்றுக்கொள்ளும் சம்பாசனை, இதற்கேற்பவே இச் சிறிய குருமடமும், பின் பெரிய குருமடமும் புதிய உருவாக்கத் திட்டங்களை முன்வைக்கிறது. போற்றுவார் போற்றட்டும் தெருப்புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும். ஏற்பது என் கொள்கையென்றால் துணிந்து சொல்வேன் தொடர்ந்து செல்வேன். இதற்கு உங்கள் செப உதவி அத்தியாவசியமாகும். குறிப்பாக உங்கள் வாழ்வு, உங்கள் அயலவர்களுக்கு, உங்களைச் சுற்றி உள்ளவர்களுக்கு முன்மாதிரிகையுள்ள வாழ்க்கையாக, கிறிஸ்தவ சாட்சிய வாழ்வாக, கத்தோலிக்க விசுவாச பாதுகாப்புக் கேடயமாக அமைய வேண்டும். இதைத் தான் உங்களிடம் சொல்லும்படி உங்கள் பிள்ளைகளும் எம்மிடம் கேட்கின்றனர். ஏனைய குடும்பங்களிலிருந்து தனித்துவமானதாகவும், முன்னுதாரணமுள்ளதாகவும் குருக்களின் குடும்பங்கள் வாழ வேண்டும்.

அன்பான பெற்றோரே! குருத்துவத்தின் மகத்துவத்தை உங்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இத்தகைய நிலையை அடையவேண்டிய உங்கள் பிள்ளைகள் செம்மையுற்று தம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். இந்த புனிதமான உன்னதமான சம்மனசுகளுக்கு மேலான நிலையை அடைவதற்கு எவ்வளவு அயராது பாடுபட வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுடைய குழந்தைகளின் குறைகளை, பிழைகளை பெலவீனங்களை மற்றவர்களைவிட பெற்றோராகிய நீங்கள் கூடுதலாக அறிவீர்கள். உங்களுடைய பிள்ளை மற்றவர்களை மதிச் சொல்லுக்கு ஆளாகாமல் உத்தம குருவாக இருப்பதே உங்கள் ஆசை. எனவே, எந்த நேரத்திலும் சிறப்பாக இவர்கள் உடல், உள ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும், கிறிஸ்து இயேசுவுக்குள் வளர விடுவது உங்கள் தலையாய பொறுப்பாகும். 100 இறாத்தல் பெறுமதியான ஒரு மத குருவின் போதனையைவிட 1 கிறாம் பெறுமதியான தாயின் புத்திமதி பெறுமதி. வல்லமை வாய்ந்தது என்பது சீனப்பழமொழி. "புத்திமதியெல்லாம் காற்றோடே. முன் மாதிரிகை கற்தூண்போலவே" என்பர் நம் முன்னோர். பெற்றோரின் குற்றம் மிகவும் பாரதூரமானது. 1 சாமுவேல் 3:13 "அவன் தன் புதல்வர்கள் கீழ்த்தரமாக நடந்துகொண்டதை

(6ம் பக்கம் பார்க்க...)

## அர்ப்பண வாழ்வின் அடைக்கலம் புனித கன்னிமரியாளே!

அருட் சகோ. றமேஸ் அ.ம.தி

கலிலேயாவின் நாசரேத்து என்னும் பதியிலே எளிமையின் தாழ்ந்த கூரையுள் ஒரு தோப்பு அமைந்திருந்தது. நித்திய பிதா மனத்தில் இறைவனின் உள்ளத்தில் இடம் பெற்ற ஒரு இளமங்கை தான் அந்தத் தோப்பு. சிறுவயது முதல் இறைவனுக்கு தன் உள்ளத்தையும் உடலையும் சுத்தம் செய்த கன்னிப்பெண். "இஸ்ராயேல் தேவனாகிய ஆண்டவரைத் தவிர வேறு எம்மனிதனாலும் நுழைய முடியாமல் அடைபட்டே கிடக்கும் கீழ்த்திசைத் தூய தலத்தின் முகவாசல்" (எசே 44:2) என்று எசேக்கியேல் இறைவாக்கினரால் புகழப்பட்ட பரிசுத்த பெண். "ஜெஸ்ஸே தண்டில் நின்று ஓர் தளிர் கிளம்பும்; அதன் வேரில் நின்று ஓர் மலர் எழும்பும்" (எசா 11:1) என்று இறைவாக்கினர் எசாயாவால் முன்னறிவிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் பெண் அவளே. இறைவனின் தாய் என்னும் மகா வரம் பெற்ற கன்னிமரியாளே அப்பெண்.

இறைவன் தனது மீட்புத் திட்டத்தில் மரியாளை இறைமகனின் அன்னையாக முன்குறித்து வைத்தார். காலம் நிறைவுற்ற போது தமது மேலான திட்டத்தைக் கபிரியேல் தூதர் மூலமாக அவளுக்கு வெளிப்படுத்தினார். "நான் ஆண்டவரின் அடிமை உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" (லூக் 1:38) என்ற மரியாளின் தாழ்மையான வார்த்தை அவளது அர்ப்பண வாழ்வின் ஒப்பற்ற உறுதி மொழியாகக் காட்சியளிக்கிறது. இறைவனின் திட்டம் தன்னில் வெளிப்பட முழுமையாக தன்னை விட்டுக்கொடுத்த கன்னித்தாய், தன்னுடைய மகனையும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்க ஆலயத்துக்கு கொண்டு வருவது அவளுடைய அர்ப்பண வாழ்வின் அர்த்தத்தையும் எமக்கு சுட்டிக்காட்டி நிற்கின்றது.

இயேசு இம்மண்ணில் பிறந்த போது "திருச்சட்டத்திற்கு உட்பட்டு" (கலா 4:5) பிறந்தார். "தலைப்பேறான அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும்" (வி.ப 13:11-16) என்ற திருச்சட்டத்தை நிறைவேற்றவும், "நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரெனத் தம் கோவிலுக்கு வருவார்" (மலா 3:1) என்ற இறைவாக்குக்கு ஏற்பவும், "பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளியாகவும், இஸ்ராயேல் மக்களுக்குப் பெருமையாகவும்" (லூக் 2:32) ஆண்டவர் இயேசுவை அன்னை ஆலயத்திற்கு கொண்டுவருகிறாள். "கடவுளே உம் திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன்" (எபி 10:7) என்று மகன் தந்தைக்கு வாக்கு கொடுக்க வழியமைத்ததன் மூலமாக அன்னை அர்ப்பண வாழ்வின் உச்சநிலையை அடைந்து விட்டார். இயேசுவோடு அன்னையின் பணி முடியவில்லை மாறாக இயேசுவின் பணியை முன்னெடுக்க திருத்தூதர்களுக்கு முன்னுதாரணமாக அன்னை விளங்குகிறாள். இயேசுவின் மறையுடலாக விளங்கும் திருச்சபையின் பக்கபலமாக இருந்து, அர்ப்பண வாழ்வை முன்னெடுக்கும் மக்களுக்கு என்றும் அடைக்கலமாக திகழுகிறாள் எமது அன்னை.

உருவிலானைக் கருவிலே தாங்கிய மரியன்னையின் கன்னிமையும், தாய்மையும் மனுக்குலத்திற்கு ஓர் ஒப்பற்ற செல்வமெனலாம். ஆகவே அன்னையின் மாண்பினை மதிக்காத மனிதர்கள் பலரையும் எங்கள் மத்தியில் காணமுடிகிறது. அருள் நிறைந்தவள், அடைக்கலம் தருபவள்; ஆண்டவரின் தும், அனைத்து மக்களினதும் தாயானவள்; இரக்கம் நிறைந்தவள்; இடைவிடாது தியானிப்பவள்; தாழ்ச்சியின் சிகரமானவள்; தூய ஆவியின் பதிவிடமானவள்; வியாகுலங்களை ஏற்றவள்; விண்ணக மண்ணக அரசியானவள்; என விவிலியம் போற்றும் அன்னையை குறைத்துப் பேசுபவர்களுக்கு நாம் தகுந்த விளக்கம் கொடுக்க முன்வர வேண்டும். வார்த்தைக்கு உயிர் கொடுத்து, இறைவனின் திட்டத்தில் தனியிடம் பெற்று, மீட்பு வரலாற்றிலே இயேசுவோடு இணைந்து செயலாற்றிய அன்னையின் மகிமையை உலகிற்கு உணர்த்த வேண்டியது அன்னையின் பிள்ளைகளாகிய எமது கடமையாகும். அன்னையின் விசுவாசம், அர்ப்பணம், ஏழ்மை, துணிவு, மீட்புப் பணியில் ஈடுபாடு, பரிந்துரை, புண்ணிய வாழ்வு போன்றவை எமது உள்ளங்களிலும் இருப்பிடம் கொள்ள வேண்டும். 'ஆகட்டும்' என்ற வார்த்தையினாலே தன்னை ஆண்டவருக்கு கொடுத்த அன்னை மரியாளை முன்னுதாரணமாகக் கொண்டு, நாங்களும் எங்களை ஆண்டவருக்கு முற்றுமுழுதாக ஒப்புக்கொடுக்க முன்வருவோம். ஆண்டவர் இயேசுவை ஆலயத்திற்கு கொண்டு சென்றது போல எங்களையும் அன்னை தன் கரத்தி



லேந்தி ஆண்டவரிடம் தூக்கிச் செல்ல அனுமதிப்போம். அர்ப்பண வாழ்வின் அடைக்கலம் என அன்னையை வாயாரப் பாடி அவளது பாசமும், நேசமும், அரவணைப்பும் எங்கள் ஒவ்வொருவரையும் என்றும் வழிநடத்தும் என்ற நம்பிக்கையில் வாழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

ஒவ்வொரு ஞாயிறு சிந்தனைத் துளிகளையும் வாசிக்கும் முன்னர் அன்றைய ஞாயிறு தினத்திற்குரிய திருவாசகங்களோடு ஒப்பிட்டுத் தியானித்து அவ்வாசகங்களில் உங்களின் மனதினைத் தொடும் வசனங்களை அன்றைய நாளின் நிகழ்வுகளோடு ஒப்பிட்டு சிந்தித்தால் இறைவார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் இறை அன்பை நன்றாகச் சுவைக்க முடியும்.

## பொதுக்காலம் 5ம் ஞாயிறு

### முதல் அழைப்பு – பேதுரு

**எசா 6:1-8 1கொரி 15:1-11 லூக் 5:1-11**

#### பேதுருவின் வாழ்க்கை

பேதுரு யோவானின் மகன், பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவர் (யோவா 1:44) பிற்காலத்தில் கப்பர்நாகூமில் வாழ்ந்தார் (மத் 8:5,14) (மாற். 1:21) திருமணமானவர். மீன் பிடிப்பதில் செபதேயுவின் புதல்வர்களான யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருடன் பங்காளியானவர். இயேசு பேதுருவை அழைத்த போது அவர் மீன்பிடிக்கும் தொழில்தான் செய்துவந்தார் (மாற் 1:16,17)

#### பேதுருவின் அழைப்பு

பேதுரு என்பதற்கு கேபாகல் என்பது பொருள் இப்புதுப்பெயர், யாவே கடவுளிலும் அவருடைய மெசியா இயேசுவிலும் நிடித்து நிற்கவும், உறுதியான தகர்க்க முடியாத பிரமாணிக்கத்திலும் பங்கு பெறுகிறார் என்பதைத் தெரிவிக்கின்றது. பேதுருவின் ஆள்தன்மை பிறரை முழுவதும் கவரக்கூடியதாக இருந்திருக்கலாம். ஆனால் அவரது ஆள்தன்மைக்காகவோ, அவருடைய வேறு எந்தத் தகுதிக்காகவோ தேர்ந்தெடுக்கப்படவில்லை, மாறாக அவருடைய

1) எளிமையான வாழ்க்கை,
2) எதையும் இறைவனுக்கு முன் ஏற்றுக் கொள்கிற பண்பு,
3) தான் (மனிதன்) எப்போதும் கடவுளுக்கே சொந்தம்

போன்ற உயர்பண்புகள் அவரிடம் இருந்ததாலேயே அவர் அழைக்கப்பட்டார், ஒரு புறம் கைம்மாறு கருதாது தேர்ந்தெடுக்கப்பட்டது. அவருக்கு ஒரு மேன்மையை அளிக்கிறது, இன்னொருபுறம், கிறிஸ்து அவருக்கு அளித்த தூதால் அவர் பிரமாணிக்கத்தோடும், அன்போடும் நிறைவேற்ற வேண்டிய பணியையும் குறிக்கிறது. (யோவா. 2:15)

#### விளைவு

என்னைப் பின்செல் - பழகிப்போனவன் பழகவந்தவனுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூப்பிடும் வார்த்தை இது, பார்த்தவன் பார்க்காதவனை அழைக்கும்போது விடுக்கும் கூக்குரல் இது, வழி தெரிந்தவன் வழிதெரியாதவனிடம் சொல்லுகிற வாக்கியம் இது, என்னைப் பின்செல், இது ஆண்டவர் நம் எல்லோருக்கும் இன்று கொடுக்கின்ற அழைப்பு. இவ்வழைப்பைச் செவிமடுத்தோமென்றால், ஆபிரகாம் அழைக்கப்பட்டது முதல், நேற்றைய தினம் அழைக்கப்பட்டது வரை உள்ள பட்டியலில் நாமும் இன்றைக்குச் சேர்க்கப்படுகிறோம்.

ஒவ்வொரு அழைக்கப்பட்ட அழைப்பிற்கும், கடவுள் சொந்தமாகிறார் ஒரு புறம் நம்முடைய தகுதிக்காகவும், நம்முடைய திறன்பாட்டிற்காகவும் கடவுள் நம்மை அழைப்பதில்லை. மாறாக இறைவனுடைய கருணை வெளிப்படவும், இறைவனுடைய சித்தம் நமது வழியாக வெளிப்படவுமே அழைக்கப்படுகிறோம்

## பொதுக்காலம் 6ம் ஞாயிறு

### பேறுபெற்றவர் யார்? – சபிக்கப்பட்டவர் யார்?

**எரே 17:5-8 1கொரி 15:12,16-20 லூக் 6:17,20-26**

#### பேறு பெற்றவர்கள் யார்?

கடவுளைப் பற்றிப் பேசுபவர்கள் மட்டுமல்ல. கடவுளை வழிபடுபவர்களும் பேறு பெற்றவர்கள் தான். கடவுளை வழிபடுபவர்கள் மட்டுமல்ல கடவுள் இட்ட வழியில் நடப்பவர்களும் பேறு பெற்றவர்கள் தான், அன்பைப் பெறுபவர்கள் மட்டுமல்ல அன்பைச் செய்பவர்களும் பேறுபெற்றவர்கள் தான்.

மத்தேயு நற்செய்தியில் இயேசு மலை மீது ஏறிப் போதித்த அதே நற்செய்தி (மத் 5) இங்கே லூக்கா நற்செய்தியில் இயேசு சமதளத்திற்கு வந்து போதித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. யூதர்களுக்காக மோசேயைப் போல இயேசுவை வடிவமைத்தார் மத்தேயு. ஆனால் லூக்கா புற இனத்து மக்களுக்காக கடவுளே இறங்கிவந்து மனிதனோடு மனிதனாக பேசினார் என்பதற்காகவே சமதளப் போதனை என்று குறிப்பிட்டுள்ளார்.

லூக்கா தரும் நான்கு பேறுகள், மிகத் தெளிவாக, சமுதாயப் பொருளாதார அடிப்படையில் உள்ள ஏழைகளே இயேசு கூறும் மனிதர்கள் என்பதை தெளிவாக்கிறது. இயேசுவின் பார்வையில் பொருள் இல்லாமல் இருக்கின்ற ஏழைகள் மட்டுமல்ல, அருளில்லாமல் இருந்து அருளைத் தேடுகிறவர்கள் பெரும் பேறு பெற்றவர்கள், ஆகவேதான்

உண்மைச் செல்வமாகிய, நிலையான செல்வமாகிய விண்ணுலகைச் சார்ந்தவற்றை தேட அழைத்தார் (லூக் 6:19-20), உடல் பட்டினியால் வாடுபவர்களைவிட, ஆன்மப்பசிக்காக வாடுபவர்களே பேறுபெற்றவர்கள், பெரும் கவலையோடு புலம்புவோரைவிட, தங்களுடைய பாவத்திற்காய் மனம் நொந்து அழுபவர்களே பேறுபெற்றவர்கள். உலகம் மடமையெனக் கருதுவதை கடவுள் இலியதெனத் தேர்ந்து கொண்டார், உலகத்தால் வெறுக்கப்பட்டவர்கள் கடவுளால் ஏற்றுக் கொள்ளப் படுகிறார்கள்.

#### சபிக்கப்பட்டவர்கள் யார்?

கடவுளை ஏற்றுக்கொள்ளாதவர்களை விட செல்வத்தை வழிபடுபவர்கள்தான் சபிக்கப்பட்டவர்கள். ஆன்மாவுக்காக உழைக்காமல் உடலுக்காக மட்டுமே உழைப்பவர்கள் சபிக்கப்பட்டவர்கள், பிறருடைய பார்வையில் தம்மை மறைத்து, தம்மை நீதிமானாய், தம்முடைய பார்வையில் பிறரை மறைத்து, பிறரைப் பாவிகளாய்ப் பார்த்துச் சிரிப்பவர்கள் சபிக்கப்பட்டவர்கள். முத்து இல்லாத சிப்பி ஒன்றுக்கும் உதவாது அதுபோல, உண்மையில்லாத புகழ்ச்சியும் அவ்வாறே என்கிறார். போலிப் புகழ்ச்சிக்கு உரியவர்கள் எப்பொழுதுமே சபிக்கப்பட்டவர்கள்தான்.

#### விளைவு

இயேசுவின் அறுவுறுமுறைகள் ஏதோ மேலோட்டமாகப் போதிக்கப்பட்டவை அல்ல மாறாக உள்ளார்ந்த உணர்வுகளை, இறைச் சிந்தனைகளை, புதிய நெறிமுறையாகக் கொண்டிருந்தன. ஆகவேதான் அவருடைய தீர்ப்பும் நன்னைத்தாழ்த்துவோர் உயர்த்தப்படுவர், தன்னை உயர்த்துவோர் தாழ்த்தப்படுவர் என்று தெளிவுறச் செய்கிறது. உலக நற்பேறுகளான பதினாறு பேறுகளில் வாழ்வதைவிட இயேசுவின் இந்த எட்டுப்பேறுகளை உணர்ந்து வாழ்பவர் இன்றும் என்றும் எப்போதும் இந்த உலகில் மட்டுமல்லாது மறு உலகிலும் பேறுபெற்றவர் ஆவார்.

## தவக்காலம் முதல் ஞாயிறு

### வாழ்வுக்கு வாருங்கள் – 1

**இ.ச. 26:4-10 உரோ 10:8-13 லூக் 4:1-13**

#### இயேசுவைப்போல் – 1

அந்நாள்களில் அவர் தூய ஆவியால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாட்கள் அலகையினால் சோதிக்கப்பட்டார் கல்லை அப்பமாகும் படி கட்டளையிடும் மீட்பின் வெளிப்பாடு கல்லை அப்பமாக்குவதில் அன்று. இறைவார்த்தையை இறைச்சித்தமாக்குவதில் உள்ளது. காரணம் கடவுளின் வார்த்தையில் வலிமை பெற்றவர்கள் அழைக்கப்பட்ட ஆபிரகாம் முதல் நேற்றையப் புனித பவுல் வரை அழைக்கப்பட்ட வார்த்தையில்தான் வாழ்ந்து காட்டினார்கள். இயேசுவின் இந்த முதல் போராட்டம் வயிற்றுப்பசியைப் போக்குவதைவிட ஆன்மப்பசியைப் போக்குவதில்தான் மீட்பு அடங்கியுள்ளது என வெளிக்காட்டியது. உடல் பசிக்காகக் கூட ஒருவர் வெறுமனே விட்டுவிடலாம், ஆனால் உள்ளத்துப் பசியோடு எவரும் இருந்திடக் கூடாது என்பதை இங்கு நிச்சயமாக்கியது. மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை என்பது மறைநூல் வாக்கு.

#### இயேசுவைப்போல – 2

அதிகாரம், ஆணவம், அகங்காரம், ஆதிக்கம் இவைகள் இன்றைய உலகில் எவரிடம் இருக்கிறதோ அவர்தான் நிச்சயமாய் மதிக்கப் படுகிறார். இயேசுவுக்கு வந்த இரண்டாவது சோதனை, ஆண்டவனைவிட அதிகாரத்தைப் பற்றிக்கொள்ள வந்த சோதனையாகும். இயேசுவின் இந்த இரண்டாவது போராட்டம், நிலையான வாழ்வு அதிகாரத்திலும் ஆணவத்திலும் அன்று ஆண்டவனைத் தொழுவதில் மட்டுமே உள்ளது. பணத்திலும் படைப்பலத்திலும் அன்று படைத்த இறைவனை மட்டுமே போற்றுவதில் உள்ளது என்பதை வெளிக்காட்டியது . இப்போதெல்லாம் மனிதன் மற்ற மனிதனைப் புரிந்து கொள்ள எந்த முயற்சியும் எடுப்பதில்லை. அன்பைவிட ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஆன்மீகத்தைவிட அதிகாரமே அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கூட்டமாகச் சேர்ந்து கொன்று வேலைநிறுத்தும் என்று பயமுறுத்தியும், பலாத்காரத்தின் மூலமாகவும் தனக்குத் தகுதியில்லாதவைகளைக் கூட அடையும் முயற்சியில் மனிதன் ஈடுபடுகிறான். உழைத்துப் பெறுவதற்குப் பதிலாக தம்பிடிப் போட்டுப் பெறுவதில் மகிழ்ச்சியடைகிறான். இந்த உலகத்தில் அழகானவைகளும் நல்லவைகளும் மறைந்து வருகின்றன. அல்லது மறைத்து வைக்கப்பட்டு வருகின்றன. மற்றவர்களிடமிருந்து பாராட்டுதல்களை. மற்றவர்கள் தன்னைப் புகழ்ந்து பேசவேண்டும் என்பதை விரும்புகிறான் இன்றைய மனிதன். அவைகளுக்கெல்லாம் ஒரு சிறந்த ஏற்பாடாக எது சரி என்று காட்டக் கூடியதாக இந்த இரண்டாவது போராட்டம் அமைகிறது. இயேசுவைப்போல கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே வணங்கவும் அவர் ஒருவருக்கு மட்டுமே பணிவிடை செய்யவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

#### இயேசுவைப்போல – 3

மக்கள் எல்லாரும் உங்களைப் புகழ்ந்து பேசும்போது உங்களுக்கு ஐயோ கேடு! புகழ்ச்சி இறுமாப்பைத் தரவல்லது. ஒவ்வொரு மனிதனும் ஏராளவுக்கு வசதிவந்து விட்டால் அவன் மனிதர்களை மறக்க முற்படுகிறான். தன்னிடம் சில குணங்கள் இல்லாதது தெரிந்திருந்தும் மற்றவர்கள் தன்னிடம் அந்தக் குணங்கள் இருப்பதாகச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும் - இயேசு உண்மையில் இறைமகனாய் இருந்தார் (லூக் 23:47) அப்படியிருந்தும் அவரின் இந்த மூன்றாவது போராட்டம் பலர் தன்னையே தலைவனாகக் கடவுளாக பாவிக்க வேண்டும் என்று எண்ணுகிறவர்களுக்குச் சிறந்த வழியைக் காண்பிப்பதாய் அமைகிறது.

## குருக்களின் முப்பரிமாண வாழ்வின் அவசியம்



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள முத்திப்பேறு பெற்ற யோசவாஸ் புகழுகமெய்யியலகம் தனது பாதுகாவலரின் திருநாளை 16.01.2010 அன்று காலை திருப்பலியுடன் சிறப்பாக கொண்டாடியது.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளரும், யாழ் மறைமாவட்ட திருவழிபாட்டு நடுநிலைய இயக்குனருமாகிய அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா அடிகளாரின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அவர் முத்திப்பேறுபெற்ற யோசவாஸ் முனிவரின் பற்றற்ற வாழ்வு, தூய்மை, செபவாழ்வு பற்றியும், இன்று இத்தகைய பண்புகள் உள்ள குருக்களையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றும் தனது ஆன்மீக ஊற்றுக்களின் ஆழங்களிலிருந்து மறையுரை ஆற்றினார். அத்தோடு முத். யோசவாஸைப்பற்றிய பிரபல்யப்படுத்தல்கள் போதாதென்றும், ஆனால் அவை காலத்தின் கட்டாயம் என வலியுறுத்தி இத்தகைய பிரபல்யப்படுத்தல்களுக்கு பாதுகாவலன் பத்திரிகை ஒரு சிறந்த ஊடகமாதலால் அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

## வளமான எதிர்காலம்

வளமான எதிர்காலம் நலமாக அமைய
வல்ல தேவனின் அருள் வேண்டி நிற்கிறோம்
துளமான கனர்கள் இனிக் குதூகலமாக
நிலையான அமைதி இனி நிரந்தரமாக
அலையும் மனங்களெல்லாம் அமைதியைக் காண
ஆண்டவா உன் ஆசீ எமக்கிங்கு வேண்டும்
காசுதான் எமக்கு வாழ்வா? தேசபக்தி இல்லையா?
கண்ணியம் கடமை அன்பு ஒற்றுமை வேண்டாமா?
வீசுகின்ற காற்றிலே வாக்குறுதி பறந்திடும்
பேசுகின்ற பேச்சுக்கள் மூச்சின்றி போய்விடும்
மாசு அற்ற தெய்வம் தான் எமை நின்று காத்திடும்
ஏழைகள் வாழ்வுயர எடுத்த திட்டங்கள் நிறைவுபெற
நாளை நம் தேசம் தன்னிறைவு பெற்றிட
சாதிமத பேதங்கள் முற்றாய் ஒழிந்திட
வேளை இதில் வெற்றிபெற்ற வீரத்தலைவர் தனை
வாழ்த்தி அவர்காய் வல்லவனை வேண்டுகின்றோம்

"தனையிழூர் நாயகி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் மாநாடு – 2009
# கருத்துப் பரிமாற்றத் தொகுப்பு

மேற்படி மாநாட்டில் யாழ் மறைமாவட்டத்தின் 33 பங்குகளிலிருந்து 350 பொதுநிலைப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இவர்கள் 12 குழுக்களாகப் பிரிந்து வழங்கப்பட்ட மூன்று வினாக்களின் அடிப்படையில் குழு ஆய்வு நடாத்தினர். அந்த குழு ஆய்வின் பயனாக வெளிவந்த கருத்துக்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. பங்குகளிலும் ஆணைக்குழுக்களிலும் அடுத்த ஆண்டுக்கான செயற்திட்டங்களை முன்னெடுக்கும் போது இக்கருத்துத் தொகுப்பையும் கவனத்தில் எடுக்குமாறு பணிவோடு கேட்டுக் கொள்கின்றோம்.

## இன்றைய உலகச் சூழலில் கிறிஸ்தவத்தை வாழும் முயற்சியில் பொதுநிலையினர் எதிர்கொள்ளும் சவால்கள்.

**1. அதிகரித்து வரும் உலகப் போக்கு (Secularization)**

உலகம் மிகுந்த சுகபோகியானதாகி வருவதால் உலக வளங்களைப் பெருக்கி வாழ்வை வசதியானதாக்கிக் கொள்ள போராட நிர்ப்பந்திக்கப்படும் பொதுநிலையினர் இப்போக்குத் தமது ஆன்மீக கிறிஸ்தவ வாழ்வுக்குப் பெரும் சவாலாக இருப்பதாக உணருகின்றனர்.

**2. அடிப்படை வாதப் போக்கு**

உலக வாழ்வில் அழுத்தங்கள் அதிகரிக்கும் போது அவற்றை எதிர்கொள்ள முடியாத சூழ்நிலையில் அடிப்படை வாதப் போக்குகளால் கவரப்பட்டு சுயாதீன சபைகளின்பால் ஈர்க்கப்படுவதை ஒரு முக்கிய சவாலாகக் கருதுகின்றனர்.

**3. தொடர்பூடகங்களினால் ஏற்படும் பாதிப்பு**

தொடர்பூடகங்களின் செல்வாக்கு நாளாந்த வாழ்க்கையின் மீது அச்சம் தரும் விதமாக அதிகரித்து விட்டதாக பொதுநிலையினர் உணருகின்றனர். இவை உருவாக்கி வரும் புதிய விழுமியங்களும் பண்பாட்டுக் கோலங்களும் கிறிஸ்தவ வாழ்வுக்கு பெரும் சவாலாக அமைகின்றன.

**4. சாதிப்பாகுபாடும் ஏனைய பிளவுகளும்**

தமிழ் சமூகத்திலே காலகாலமாக ஊறிப்போய் விட்ட மேற்படி பிளவுகள் கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வாக்குவதற்கு பெரும் சவாலாக அமைந்து காணப்படுகின்றன.

**5. விசுவாசத் தளர்வு**

போர்ச்சூழலை தொடர்ச்சியாக சந்தித்து வருகின்ற நிலைமையானது மக்களது விசுவாசத்தில் பெரும் தளர்வை ஏற்படுத்தி வருகின்றது. எமது பாரம்பரியமான விசுவாசம் பற்றிய புரிந்துணர்வு சமகாலம் எழுப்பும் வினாக்களுக்கு விடையளிக்க போதாதவையாக உள்ளன.

**6. தன்நபர் வாதம் மேலோங்கி வருதல்**

வாழ்வதற்காகப் போராட வேண்டியுள்ள சூழ்நிலையில் தமது முன்னேற்றம் வெற்றி என்பவற்றிலே அதிகம் ஈடுபாடு கொள்ள வேண்டியுள்ள நிலை ஏற்படுவதால் மற்றவர்களைப் பற்றிய அக்கறை குறைந்து வருகின்றது. மற்றவர்களை வீழ்த்தியேனும் நான் முன்னேற வேண்டும் என்ற மனநிலை வளர்ந்து வருகின்றது.

**7. போரின் பாதிப்புக்கள்**

போரின் பாதிப்புக்களால் அவலப்படுவோர் பலர். இடப்பெயர்வு, சொத்திழப்பு, உயிரிழப்பு, அங்கவீனம் என பல துன்பங்களை சந்திக்க நேர்ந்துள்ள சூழ்நிலையில் கிறிஸ்தவ நோக்கில் இவற்றை ஆய்வு செய்வதும் செயற்பாடுகளை மேற்கொள்வதும் மிகப் பெருத்த ஒரு சவாலாகும்.

### இறையாட்சிப்பணியில் பொதுநிலையினர் பங்கேற்க தடையாக இருக்கும் காரணிகள்.

**1. விழிப்புணர்வின்மை**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர் திருச்சபை பற்றிய கருத்தியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றிய விழிப்புணர்வின்மை பரவலாகக் காணப்படுகின்றது. பொதுநிலையினருக்கு திருச்சபையில் உள்ள முக்கிய இடம் பற்றிய விழிப்பு நிலை இல்லை. இதனால் திருச்சபை என்பது திருப்பணியாளரே எனக் கருதும் நிலையே இன்னும் நீடித்து வருகின்றது.

**2. திருநிலையினரின் அதிகாரப் போக்கு**

திருச்சபையில் பொதுநிலையினர், திருநிலையினர் சமத்துவம் பற்றியும் கூட்டுப் பொறுப்புப் பற்றியும் எவ்வளவு பேசப்பட்டாலும் சில திருநிலையினர் அதிகார மனநிலையோடு நடந்து கொள்வதால் பொதுநிலையினர் ஈடுபாடின்றி செயல்படுவதைத் தவிர்த்து வழிபாடுகளோடேயே ஒதுங்கிப் போக விரும்புகின்றனர்.

**3. பங்குகளில் தனிநபர் / குடும்ப ஆதிக்கம்**

சில பங்குகளில் சில பொதுநிலையினர் தாமே அனைத்தையும் மேற் கொள்வதாலும் தமது குடும்பமே எல்லாம் செய்ய வேண்டும் என விரும்பி ஏனையோரை ஓரங்கட்டுவதாலும் ஏன் வீண் வம்பு என பொதுநிலையினர் பலர் ஒதுங்கிச் செல்கின்றனர்.

**4. தாழ்வு மனப்பான்மையும் பயமும்**

என்னதான் இருந்தாலும் நாம் தகுதியற்றவர்கள் நம்மால் முடியாது என்ற எண்ணம் பொதுநிலையினரிடம் காணப்படுகின்றது. திருச்சபையில் ஏதேனும் செய்ய முன்வந்தால் மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுமா? என்ற பயமும் அவர்களிடம் காணப்படுகின்றது.

**5. தகுந்த தொடர்ச்சியான பயிற்சியும் ஊக்குவிப்பும் இன்மை**

காலங்காலமாக செயற்பாடற்ற நிலையில் இருந்த பொதுநிலையினர் படிப்படியாகத்தான் பொறுப்புக்களை ஏற்க வேண்டும். இதற்கு தொடர் ஊக்குவிப்பும் தொடர்ச்சியான பயிற்சிகளும் அவசியம். இவை கிடைப்பதில்லை. பல விடயங்கள் உற்சாகத்தோடு தொடங்கப்பட்டு பின்பு நிறுத்தப்படுவது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக பங்குத் தந்தையர்கள் மாற்றம் பெறுகின்ற போது புதிதாக வருகின்ற பங்குத்தந்தை முன்னைய திட்டங்களை தொடராமல் விடுவது பின்னடைவைத் தருகின்றது.

**6. பழைமை வாதம்**

சில பங்குகளில் பொதுநிலையினர் தொடர்ந்தும் பழைமை வாதத்திலேயே ஊறிக் கிடப்பதனால் மாற்றங்களை உள்வாங்கப் பின் நிற்கின்றனர். மாற்றங்களால் ஏற்படும் நன்மைகளை அனுபவ பூர்வமாக உணராதது இதற்கு ஒரு காரணமாகும்.

### பொதுநிலையினரின் பங்கேற்பை அதிகரிக்க செய்ய வேண்டிய விடயங்கள்

**1. விழிப்பூட்டும் செயற்பாடுகள்**

திருச்சபையில் பொதுநிலையினரின் அழைப்பும், பங்கும், பணியும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் தொடர் பயிற்சிகள் மிகவும் அவசியமானவை. ஞாயிறு மறையுரைகளூடாகவும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளூடாகவும், கலைநிகழ்வுகள், போட்டிகள், குறும் படங்கள் ஊடாகவும் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.

**2. பங்கேற்கும் அமைப்புக்களை ஏற்படுத்தலும் வலுப்படுத்தலும்**

ஆலயப் பங்கு மட்டங்களில் அருள்பணிச் சபைகளை ஏற்படுத்தி சீரான முறையில் நடாத்துவதன் மூலம் பல பொதுநிலையினருடைய பங்கேற்பை உள்வாங்கலாம். இவர்களுக்குரிய பயிற்சிகள் வழங்கப்படும் போது பல பொதுநிலைத் தலைவர்கள் உருவாக்கப்படுவார்கள்.

**3. அன்பியங்கள், பக்திச் சபைகளை உருவாக்கல்**

அடிமட்ட மக்களின் பங்கேற்புக்கு அன்பியங்கள் பெரும் வழிவகுக்கும் என்பதால் எல்லாப் பங்குகளிலும் அவற்றை உருவாக்க வேண்டும். பக்தி சபைகளை உருவாக்குவதன் மூலம் இருப்பவற்றை வலுப்படுத்துவதன் மூலமும் பொதுநிலையினர் பங்கேற்பை அதிகரிக்கும்.

**4. இல்லத்தரிசிப்பு**

பங்குத்தந்தை பங்கு மக்களின் இல்லங்களைத் தரிசிப்பது உறவையும் தொடர்பையும் மேம்படுத்தும். இதனால் பொதுநிலையினர் பல்வேறு பணிகளுக்கு அழைக்கப்படும் போது தயக்கமின்றி பங்கேற்க தூண்டப்படுவார்கள். ஆகவே இல்லத்தரிசிப்பு மிகவும் அவசியமானது. மாநாட்டில் பல சந்தர்ப்பத்தில் இவ்வேண்டுகோள் எழுந்ததை அவதானிக்க முடிந்தது.

**5. பொதுநிலையினரின் கருத்துக்கள்**

பங்கு மட்டத்திலும் மறைமாவட்ட மட்டத்திலும் தீர்மானங்கள் மேற்கொள்ளும் போதும் திட்டங்களை உருவாக்கும் போதும் பொதுநிலையினரின் கருத்துக்களுக்கு சந்தர்ப்பமும் மதிப்பும் அளிக்கப்படுவது அவசியம். இதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். மறைக் கோட்ட, மறைமாவட்ட அருள்பணிப் பேரவைகள் உருவாக்கப்படுவது இதற்கு உதவும்.

**6. பொதுநிலையினரின் திருப்பணிகளை ஏற்படுத்தல்**

ஏற்கனவே திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட இறைவாக்குப் பணியாளர், வழிபாட்டுப் பணியாளர் போன்ற நிலையான பொதுநிலையினர்கள் திருப்பணிகளை வழங்கலாம். குறிப்பாக தேவைப்படும் இடங்களில் நற்கருணைப் பணியாளர்களை நியமிப்பது அவசியமானது. மேலும் இளைஞர் நலப் பணியாளர் போன்ற காலத்தின் தேவைக்கேற்ற திருப்பணிகளையும் தகுந்த பயிற்சியோடு ஏற்படுத்தலாம்.

**7. விசுவாசப் புதுப்பித்தலும் ஆழப்படுத்தலும்**

இன்றைய உலகு தரும் சவால்களை எதிர் கொண்டு கிறிஸ்தவத்தை வாழ்வதற்கு பொதுநிலையினரின் விசுவாசம் புதுப்பிக்கப்படுவதும் ஆழமாக்கப்படுவதும் அவசியமாகும். இதற்குரிய விதமாக ஆழமான ஆன்மீக அனுபவத்தை தரவல்ல உரைகள், தியானங்கள் நடாத்தப்படுவதும் வழிபாடுகள் ஒழுங்கமைக்கப்படுவதும் அவசியமாகும். இவை பங்கு மட்டத்தில் நடாத்தப்பட வேண்டும்.

**8. மறையறிவை அதிகரித்தல்**

பொதுநிலையினர் தமது வாழ்வை இறைவார்த்தையில் ஊன்றிக் கொள்ள அதிக ஆர்வம் காட்டி வரும் இந்நாட்களில் போதிய வேதாகம அறிவும் பெற்றுக் கொள்வது அவசியமாகிறது. பொதுநிலையினர் சீராக இவற்றைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

**9. திருச்சபையில் ஒரு குடும்ப உணர்வை ஏற்படுத்தல்**

திருச்சபையில் குறிப்பாக பங்கு மட்டத்தில் பொதுநிலையினர், திருநிலையினர், துறவிகள் ஆகிய நாம் ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்ற அன்புறவை ஏற்படுத்தல் அவசியமானது. இந்த உணர்வு கூட்டுப் பொறுப்பையும் பங்கேற்பையும் அதிகரிக்கும்.

**10. பொதுநிலைப் பணியாளருடனான கலந்துரையாடல்**

பங்குகளில் பக்தி சபைகள், அன்பியங்களின் ஊக்குவிப்பாளர்கள், அருட்பணிச் சபை உறுப்பினர்கள், பணிக்குழுக்களின் உறுப்பினர்கள் போன்ற பொதுநிலைப் பணியாளர்கள் அனைவருக்கும் பங்குத்தந்தை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒன்றுகூடல்கள் நடாத்தி பங்குப் பணிகளை திட்டமிடுவதும் மீளாய்வு செய்வதும் பயனளிக்கும்.

யாழ் மறைமாவட்ட
பொதுநிலையினர் கழகம்.

## இறை அழைத்தலுக்குப்... 4ம் பக்கத்தொடர்ச்சி

அறிந்திருந்தும் அவர்களை தடுக்காத குற்றத்திற்காக அவனது வீட்டிற்கு நீங்காத தண்டனைத் தீர்ப்பு வழங்குவேன் என்று அறிவித்தேன் என்றார்." என்ன தண்டனை? வாக்குத்தத்தத்தின் பெட்டகம் பறிக்கப்பட்டதுமல்லாமல் 1 சாமுவேல் 4:2 கூறுகிறது. 4,000 இஸ்ராயேலர் வெட்டிவீழ்த்தப்பட்டனர். ஏலியின் ஒரு குற்றத்துக்கு அதாவது பிள்ளைகளின் ஒரு குற்றத்தைக் கண்டிக்காத குற்றத்துக்கு இவ்வளவு தண்டனையென்றால் இப்பொழுதுள்ள பெற்றோராகிய உங்களது குற்றங்களுக்கு எவ்வளவு கடுமையாக ஆண்டவர் தண்டிப்பார். இணைச்சட்டம் கூறுவது, 30:15. ''இதோ பார், வாழ்வையும், சாவையும் நன்மையையும், தீமையையும் நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன்" பிள்ளை வளர்ப்பு ஆண்டவரின் ஆசீர்வாதம்.

சில சந்தர்ப்பங்களில் உங்கள் பிள்ளைகள் குருத்துவ அழைத்தலிருந்து விலகி வீடு திரும்பும் பட்சத்தில் இதை ஒரு சமூக வடுவாகவோ, குடும்பக் குறையாகவோ எடுக்கக்கூடாது. திருமுழுக்கு, உறுதிப்பூசுதலில் பெற்ற அடிப்படைக் கிறிஸ்தவம், இவற்றை வெற்றிகரமாகத் தொடரக்கூடிய அத்திவாரம் குருமடத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதை தொடர்வதற்கான உற்சாகமும், உறுதியும் நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும். ''நன்று" நன்று நம்பிக்கைக்குரிய பணியாளரே' என்ற வார்த்தையை இங்கிருக்கும் நாமும் நம் பிள்ளைகளும் ஒரு நாள் கேட்கும் பெரும் பாக்கியத்தை அடையும் குறிக்கோளை எதிர்நோக்கி நடப்போமாக!

## முன்னேற முயலும் பேதை

''உண்மையான வீரம் உள்ள ஆளை எனக்கு காட்டமுடியுமா'' என்று ராஜா கேட்டபோது காட்டுறேன் என்று சம்மதித்தார் மந்திரி. ராஜாவுக்கு பிறந்த நாள். அதனால் ஒரு வாரமாக கோலாகலமான விருந்து. மக்கள் எல்லோரும் கூட்டம் கூட்டமாக வந்து தினமும் சாப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள். ராஜாவும் மந்திரியும் பின் நேரம் வெளியில் சென்ற போது வயலில் ஒரு முதியவர் ஒருவர் வேலை செய்துகொண்டிருந்தார் ஏன் பெரியவரே! அரண்மனையில் விருந்து நடக்கிறதே தெரியாதா? மக்கள் எல்லாம் தினமும் சாப்பிடுகிறார்கள் நீ மட்டும் ஏன் கஷ்டப்பட்டுகிறாய் என்று மந்திரி கேட்டார். அதற்கு அந்த பெரியவர், 'அரண்மனையில் விருந்து நடக்கிறது எனக்கு தெரியும் இருந்தாலும் என் கையால் உழைத்து உண்பது என்றால் எனக்கு மகிழ்ச்சி. அரண்மனை விருந்தைவிட எனக்கு இதுதான் பெரிது அரண்மனையில் ஒருவாரம் சோறு போடுவார்கள். பின்பு என்ன செய்கிறது என்று சொல்லிக் கொண்டு தொடர்ந்து தன் வேலையை செய்ய ஆரம்பித்தார். இப்ப புரியுதா ராஜா! இவர்தான் உண்மையான வீரம் உள்ள ஒருவர் என்று ராஜாவுக்கு காட்டினார் மந்திரி.

**சிந்தனை :- அடுத்தவர்களை நம்பி, கையேந்தி வாழும் வாழ்வு கோழை வாழ்வு. நீ செய்யும் நன்மையைக் கட்டாயத்தினால் செய்யாமல் மனமாரச் செய்யவேண்டுமென்பதே என் விருப்பம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்பும் அதன் பலன்கள் பதினாறும்

## அருட்பணி மா. ரேஜிஸ் இராசநாயகம்

நூறு முறைகள் வரை விவிலியத்தில் நோன்பு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், ஏராளமான கிறிஸ்தவர்களின் வாழ்வில் காணப்படாத நடைமுறையாகவே அது இன்னும் உள்ளது. ஆயினும் ஆன்மீக சக்தியுடன் தார்மீக அதிகாரத்தால் நிரம்பிய வாழ்வுள்ள மக்களுடன் நோன்பு தொடர்புபட்டுள்ளது. செபத்திலும் நோன்பிலும் அதி ஈடுபாடு கொண்டவரான இறைமகன் இயேசுவைத் தவிர, பிரபலமான மதத்தலைவர்களான மோசே, எலியா, அன்னை திரேசா போன்றவர்களும் நோன்பிருந்தனர். அதுவும் அனேகமாக நீண்டகாலங்கள் இருந்துள்ளனர்.

அனேகமாக கிறிஸ்தவர்கள் நீண்ட நோன்பின் தேவையை உணராது விட்டாலும், சிறிது நேரத் திற்கென்றாலும் ஒறுத்தல் செய்தால் பலன்கள் கிடைக்கும். நோன்பில் ஈடுபடுவதற்கு நல்ல ஒழுங்கு முறை ஒன்றைக் காட்ட, 16 காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**01. மனதுருக்கத்தின் விரிவாக்கம் :**

உலகின் பட்டினிப் பிரச்சினை பற்றிப் பேசுவது இலகுவானது. நாம் உணவின்றி இருக்கும் பொழுது தான் உண்மையான உடலின் தாக்கமும் உணர்வு பற்றிய விழிப்புணர்வும் ஏற்படும். நோன்பிருந்த ஒரு பெண் கூறினார். "ஏழைகளின் பரிதாபமான நிலைபற்றிய எனது உணர்வு அதிகரித்தது. ஒரு நாளில் ஒரு நேர உணவு மட்டும் உட்கொண்டதால் நான் இளைத்துப் போனதுடன் வெறுப் படைந்தேன். இவ்வளவிற்கும் நானாக விரும்பித்தான் நோன்பிருந்தேன். ஒவ்வொரு நாளும் ஒரு முறை உடல்பலற்ற உணவு கிடைக்கும் அதிஷ்டம் பெறுபவர்களுக்கு எப்படியிருக்கும்? அதிலே நானும் பங்குபற்றியதன் பின்பு, அவர்களின் வேதனை பற்றி அக்கறை காட்டா திருக்கமுடியாது."

**02. சவாலுக்குத் தயாராகுதல் :**

விவிலியத்திலுள்ள மக்கள் வேதனைகள் மற்றும் சோதனைகளுக்கு முகம் கொடுத்த பொழுது செபத்தாலும் நோன்பாலும் அவற்றிற்கு விடைகண்டனர். எஸ்தர் ராணிதான் விவிலியத்திலுள்ள பெரிய உதாரணம். யூதரை அரசன் அழிப்பதில் இருந்து காப்பதற்காக மூன்று நாள் நோன்பிருக்கும்படி தனது மக்களைக் கேட்டிருந்தாள்.

**03. உறுதியான மனோபாவம் :**

கடந்த காலங்களில் முன்னோரின் பிழையான அபிப்பிராயம் நோன்பிற்கு கொடுக்கப்பட்டிருந்தது. உடலை வருத்துதல், செய்த பாவங்களுக்கு மன்னிப்பு பெறுவது என்பன. அவை ஆரோக்கியமான ஆன்மீக வழிமுறைகளாக இருந்தாலும் ஆவியை உந்தித்தள்ள முன்னுரிமைகளை மாற்ற, யேசுவுடன் நம்மை இணைத்துக் கொள்ள அவற்றைப் பயன்படுத்தலாம்.

**04. தலைசிறந்த ஆன்மீக வாதிகளின் உதாரணம் :**

உரோமையில் கிளிமென்ற், யோன் கிறிசோஸ்தொம், பீற்றர் கிறிஸோலோகுஸ், ஜெறோம் மற்றும் அகுஸ்தீன் ஆகியோர் நோன்பினை இரக்கம் மற்றும் அன்புடன் தொடர்புபடுத்தினர். அகுஸ்தீனார் உண்மையாகவே இப்படிக் கூறியிருந்தார். இறைவனை நோக்கி உமது வேண்டுதல் பறந்து செல்ல வேண்டுமென விரும்புகிறீரா? அதற்கு இரு இறக்கைகள் கொடும். அவை: நோன்பும், தருமம் செய்வதும்.

**05. மற்றவர்களுக்குப் பயனுள்ளவை :**

உணவு உட்கொள்ளாது சேமிக்கப்பட்ட பணத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். ஜோன் வெஸ்லி சட்டத்தரணி நோன்பு மூலமாகச் சேமித்த பணத்தை குடியிருப்பு வசதியற்ற குடியிருப்புச் சமுதாயத்திற்கு வழங்கினார்.

**06. மேலதிக ஆன்மீகச் செயற்பாட்டிற்கான நேரம் :**

ஒஸ்வாட் சேம்பர்ஸ் கூறியிருந்தார். "விவிலியத்தை வாசிப்பதற்கோ, வேண்டுதல் செய்வதற்கோ எனக்கு நேரமில்லையென சொல்லாதிருக்கக் கவனமாயிருங்கள்." அதை விடுத்து, எனது இவ்வேலைகளைச் செய்வதற்காக நான் என்னை ஒழுங்கு படுத்தவில்லை என்று சொல்லுங்கள். எமது உணவுகளைத் தவிர்க்கும் பொழுது வேண்டுதல்களுக்கு போதிய நேரம் உள்ளது.

**07. ஆன்மாவிற்கு நன்மைகள் :**

புனித தோமாஸ் அக்குனாஸ் கூறியிருந்தார். "கட்டுப்பாடில்லாது உண்ணும் முறை ஆன்மாவை இருட்டடித்து ஆன்மீக செயற்பாட்டினைப் பெற முடியாமற் செய்கிறது. நோன்பிருப்பவர்கள் இந்தச் செயற்பாடு ஆன்மீகப் புதுப்பித்தலுக்கு இட்டுச் செல்வதுடன் அதிகரித்த உள்ளுணர்வுகள், ஆழ்ந்த அர்ப்பணிப்பு, வாழ்வின் நோக்கம் பற்றிய தெளிவு, மற்றும் இறைவனுடனான கூடிய அந்தரங்க உறவு ஆகியவற்றையும் கொடுக்கிறது.

**08. அப்பத்தினால் மட்டுமல்ல :**

உடம்பிற்கு தேவையானதையும், சக்தியையும் உணவு தருகின்றபொழுதிலும், நோன்பானது ஆன்மாவிற்கு ஊட்டத்தையளிக்கிறது. யேசுவே, இணைச்சட்டம் 8:3 ல் கூறப்பட்டது போல "மனிதன் அப்பத்தினால் மட்டுமல்லாது ஆண்டவரின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லாலும் வாழ்கின்றான்" (மத். 4:4) எனக் கூறியுள்ளார்.

**09. உலகத்தன்மையுடனான போராட்டம் :**

"நீங்கள் மகிழ்ச்சியாக, சௌக்கியமாக பிரபல்யமாக அல்லது புத்திசாலியாயிருக்க இதைச் செய்ய வேண்டும் அதைச் செய்யவேண்டும் என்று கூறும் விளம்பரங்களால் இடைவிடாது அமிழ்த்தப்படுகின்றீர்கள்" என்கிறார் மாள் எஸ் மல்லர். நோன்பிருப்பதால் நாம் எமக்கு வெளியேயுள்ளவற்றில், உணவு போன்றவற்றில் கூட முழுதும் தங்கியிருப்பதில்லை என்று உறுதிபடக் கூறமுடியும்.

**10. அதிகரித்த சக்தி :**

'வெற்றிகரமான நோன்பு' என்னும் நூலின் ஆசிரியரான ஜேர்மனியைச் சேர்ந்த, கலாநிதி ஹெலமுட்லூட்ஸ்னர் வலிமை, வேகம், விடா முயற்சி, ஒரு நிலைப்படுதல் ஆகியவை, உணவு உட்கொள்ளுதலின் பலாபலன்கள் அல்ல என்கிறார், மாறாக வயிறு நிறைந்திராத பொழுது நீர் நல்ல விதமாகச் சிந்திக்கிறீர். உம் மலையேறுபவர்கள், ஓட்ட வீராங்கனைகள்.

**11. வாழ்விற்கு உரிய மதிப்பு :**

வார இறுதியில் நோன்பிருந்து ஒருவர் நோன்பின்முடிவில், சாதாரணமாக சூப்பை பருகினார். "இரு நாட்கள் உணவு இல்லாதிருந்தபின் சூப் நம்பமுடியாதளவிற்கு சுவையுள்ளதாக இருந்தது. ஒவ்வொரு கரண்டி எடுத்ததும், பெரிய விருந்தில் உண்பது போல இருந்தது" என்று அவர் கூறினார்.

**12. நற்பண்புகள் உயர்ந்து தீயவை குறைந்தன :**

"எல்லா பெரிய நற்பண்புகளும் சுய ஒறுத்தலில் அடையாளத்தைக் கொண்டிருக்கும்" என்று வில்லியம் எல்லறின் கூறினார். சுய ஒறுத்தலுடன் இணைந்த வேண்டுதல் செய்யும் நேரம் இருதயத்தினதும், ஆன்மாவினதும் எல்லைகளை விஸ்தரிக்கும்.

**13. நோவும் இல்லை தைலமும் இல்லை :**

வேதனையின்றி மகிழ்ச்சியில்லை. வாழ்க்கையின் மென்மையான தன்மையை அதிகரிப்பதற்கு நோன்பு உறுதியான முன் ஆயத்தமாகும். "நோவு இல்லையேல் தைலம் தேவையில்லை. முள்ளின்றி சிம்மாசனம் இல்லை: வேதனையின்றிப் புகழில்லை: சிலுவையின்றி முடிகிடைக்காது" என்று வில்லியம் பென் கூறியுள்ளார்.

**14. தேகாரோக்கியத்தில் முன்னேற்றம் :**

உஷ்ணத்தை உருவாக்கும் கலோரி குறைவுபட்டாலான ஆரோக்கியமாக, நீண்டகாலம் வாழ்வதாக அதிகரித்துவரும் ஆதாரங்கள் காட்டுகின்றன. இதற்கு உதாரணம், ஒக்கினாவின் மக்களில் நூறு வயது தாண்டியவர்களின் விகிதாசாரம் கூடுதலாகவுள்ளது.



**15. மற்றவர்களுக்கு ஒளி :**

தனது கடுமையான நோன்பின் மூலம், மகாத்மா காந்தி தனது நாட்டு மக்களுக்கும், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும் அறிவு புகட்டினார். அதனால் இந்தியா சுதந்திரம் பெற்றனர்.

**16. கிறிஸ்துவைப் பின்பற்றுதல் :**

இயேசு தனது பொதுவாழ்வுக்கு முன்னதாக நோன்பிலும் வேண்டுதல்களிலும் நாற்பது நாட்கள் ஈடுபட்டிருந்தார். தன்னைப் பின்பற்றியவர்களும் நோன்பிருக்க வேண்டுமென அவர் விரும்பினார்.

---

# திரைப்படத் திறனாய்வு

யாழ் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணையத்தின் இவ்வாரத் திறனாய்வில்

## "கண்டேன் காதலை"

வாழ்க்கை என்பது எதிர்பாராத நிகழ்ச்சிகளை நோக்கிய தொடர்ச்சிப் பயணம் என்று வாழ்வின் நிகழ்வுகளை ஆழமாக அலசிப்பார்க்காமல் எதிர் கொள்கின்ற ஒரு பெண் (தமன்னா) சந்திக்கும் வாழ்வின் யதார்த்தங்களை வைத்து உருவாக்கப்பட்டதே கண்டேன் காதலை என்ற திரைப்படமாகும். தனது படிப்பை முடித்துவிட்டு மதுரையிலிருந்து தேனிக்கு புறப்பட்டு போகும் தமன்னா புகையிரதத்தில் கதாநாயகனான பரத்தை சந்திக்கிறார். தன் காதலை தோல்வியினால் தன் வாழ்வே முடிந்ததென்று எண்ணி வாழ்வில் இலக்கற்று தனது செல்வந்த வாழ்வையும் இழந்து விரக்தியுடன் போகும் இடம் தெரியாமல் போய்க்கொண்டிருக்கிறான் கதாநாயகன் பரத். புகைவண்டி பயணம் இருவரையும் நண்பர்களாக்கிவிடுகிறது.

தமன்னா ஏற்கனவே முன்னா என்பவரைக் காதலித்து வருகிறார். ஆனால் தமன்னா வீட்டில் அவளது முறை மாமனை திருமணம் முடிக்குமாறு கேட்கின்றனர். அவள் அதற்கு சம்மதம் கொடுக்க மறுத்து தனது காதலனோடு ஓடிப்போய்விட முடிவெடுக்கிறாள். ஆனால் தன் காதலனால் ஏமாற்றப்பட்டதைப் பின்னரே உணர்கின்றாள். தன் நிராணங்கள் பிழைத்துப்போனதை அறிந்து தனது செயல்களுக்கு தானே பொறுப்பு என ஏற்றுக்கொண்டு யார்மேலும் பழிசுமத்தாமல் கன்னியர் மடம் ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிகின்றார்.

வெவ்வேறான காதலில் தோல்வியுற்று விரக்தியில் இருக்கும் பரத் - தமன்னா இருவரையும் மீண்டும் இணைத்து உண்மையான அன்பினை உணரவைத்திருப்பதையும், உண்மைக் காதலுக்காக எதையும் செய்யத்தயாராக இருப்பதையும், இருவரது விரக்தி, தோல்வி சூழ்நிலைகளில் ஒருவர் மற்றவருக்கு வாழ்வில் பக்கபலமாக இருப்பது போன்ற நல்ல காட்சிகளுடன் படம் நகர்கின்றது.

கண்ணனின் இயக்கத்திலும், வித்தியாசாகரின் இசையிலும், முத்தையாவின் ஒளிப்பதிவிலும் வெளிவந்திருக்கும் இப்படம் வழமையான தமிழ்ச்சினிமாவின் பாங்கிலிருந்து விடுபடவில்லையாயினும், காதலில் தோற்ற ஓர் ஆணினதும், பெண்ணினதும் நட்பு நாட்களில் அவர்களுக்கிடையிலான வாழ்வின் யதார்த்தங்களை வித்தியாசமான முறையில் சொல்கிறது. தனது புகைவண்டி நண்பி கொடுத்த உறுதியிலும், வாழ்க்கை நிகழ்வுகளை மாற்றிச் சிந்திக்க கற்றுக்கொடுத்த ஆற்றலையும் கொண்டு, மீண்டும் தனது தந்தையின் தொழிலில் இணைந்து அதை அனைவரும் திரும்பிப்பார்க்குமளவுக்கு உயர்த்திக் கொண்டு வருகின்றான் பரத். இறுதிவரை நாம் நண்பர்களாகவே இருக்கமுடியும் என்ற உறுதியுடன் இருப்பவர்கள், இறுதியில் அதற்கு முரணானவகையில் காதலர்களாகி, கரம் பற்றுவது அபத்தமான தமிழ்ச் சினிமாத்தனம். ஒரு ஆணும் பெண்ணும் தமிழ்ச்சினிமாவில் நல்ல நண்பர்களாகவே இருக்கமுடியாதோ? மற்றொரு ஐயம் எழுகின்றது. தனது வெற்றிக்குப் பின்னிருந்த நண்பியின் வாழ்வும் அவளது காதலனது பிரிவினால் விரக்தியுற்றிருந்த நிலையினை மாற்றி அவள் எதிர்காலத்தில் நம்பிக்கை ஒளியேற்றி வைக்க முயல்கையில் நட்பு காதலாகிறது என்ற காரணம் சரியாக அமையவில்லை. அரைத்த மாவையே அரைப்பது போன்று கதை காணப்படுகிறது.

நகைச்சுவை நடிகரான சந்தானம் தனது பாத்திரத்தை திறம்படச் செய்து மக்கள் மனங்களில் இடம் பிடிக்கிறார். வழமையான சண்டைக் காட்சிகளும், அருவிக்குளியல், ஆட்டம் பாட்டம் எல்லாமே இதனை ஒரு தமிழ்ப்படம் என்று காட்டுகிறது. ஆபாசங்கள் பெரிதளவில் இல்லாமல் கதையை வளர்த்து செல்லும் இயக்குனரின் பாங்கு பாராட்டுக்குரியது. ஒருவரின் தோல்விக்கும், வெற்றிக்கும் பின்னால் நிச்சயம் ஒரு பெண் இருப்பாள் என்பதை 'கண்டேன் காதலை' வெளிப்படுத்தி நிற்கின்றது.

(யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம்)

---


1ம் ஆண்டு நினைவும் 17ம் ஆண்டு நினைவும்



"சீவியக்கில் வம்பய நேசித்தோரே மரணத்தில் பிள்ளும் வம்மை மறவாதீர்."

நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதை விட்டு ஒருபோதும் விலகாது.



விக்ரர் ஞானப்பிரகாசம் (பப்பா)

மலர்வு 28.04.1934
உதிர்வு 09.02.2009

திரேசம்மா விக்ரர்

மலர்வு 21.05.1933
உதிர்வு 01.03.1993

803, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

Advt-09/10

இவர்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினர்.



31ம் நாள் நினைவஞ்சலி

அமரர்



மரியாம்பிள்ளை ஞானம்மா

மலர்வு 1920.09.17
உதிர்வு 2010.01.10

ஆண்டவரே என் ஒளி
அவரே என் மீட்பு

வேலணை கிழக்கு
1ம் வட்டாரம்
சாட்டி

Advt-10/10

பிரிவால் துயருறும்
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
சீநகர சபை, யாழ்ப்பாணம்.



# வீடுகளை இழந்திருந்தாலும் விசுவாசத்தை இழக்கக்கூடாது



கேயிர்றி மக்கள் கடவுளை நோக்கித் திரும்பி இறைவனுக்கு திருப்பலி செலுத்துகையில் அப்பலியில் மறையுரை ஆற்றிய பங்குக்குரு மேற்கண்டவாறு கூறினார்

கடந்த 12.01.2010 அன்று கெயிர்றியை மாபெரும் நிலநடுக்கம் வாட்டி வதைத்ததை அனைவரும் அறிவோம். உயிர்பிளைத்தவர்கள் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கவும் அவரிடம் உதவி நாடியும் சென்று தேவாலயங்கள் தரைமட்டமாகக் காட்சிதரும் பகுதிகளில் வழிபாடுகளில் ஆங்காங்கே ஈடுபட்டுவருகின்றனர். போட் ஓட் பிறின்ஸ் நகர-Port-Au-Prince பகுதி தேவ ஆலயங்களும் தரைமட்டமாக கிடந்த போதும் கடந்த 17.01.2010 அந்த பகுதியில் புனித லூசியஸ் — ஸ்பானிய தேசத்தின் அரசன் — St. Louis – the King of Spain பேராலயம் இருந்த கட்டடத்திற்கு அருகில் நிலநடுக்கம் ஏற்பட்டு ஆறுநாட்களுக்கு பின்பு ஞாயிறுதிருப்பலி ஒன்று நடைபெற்றுள்ளது. கிட்டத்தட்ட 100 பேர்களே இத்திருப்பலிக்கு கூடியிருந்தனர்.



திருப்பலியில் மறையுரை ஆற்றிய பங்குக் குரு எற்றிக் தோசைன் -The Rev Eric Toussaint தற்பொது எமக்கு உணவு, குடிநீர் உட்பட உலகிலிருந்து உதவிகள் அவசரமாக, அதிகமாகத் தேவைப் படுகின்றன. ஆனாலும் அவை நத்தை வேகத்திலே எம்மை நோக்கி வருகின்றன. உதவியின்றி பலர் தவிக்கின்றோம் இந்த வேளையில் ஏன் நாம் இறைவனுக்கு நன்றி கூறி திருப்பலி செய்யவேண்டும். என்ற கேள்வி ஒவ்வொரு கணமும் எம் எல்லார் மனதிலும் ஊசலாடும் கேள்வியே. கடவுள் எம்மைக் கைவிட்டார் என்று அவர்மீது கோபம் அதிகரிக்கலாம். ஆனால் தற்பொழுது நாம் இந்த இடத்தில் நிற்பதற்கு இறைவன் துணை புரிந்திருக்கின்றார் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. நடந்தவைகள் எல்லாம் இறைதிட்டத்தின் படி நடந்துள்ளன. தற்போது நாம் இறைவனின் கைகளில் இருக்கின்றோம். அவரே எம்மை தாங்கி நிற்கின்றார். அரசுகளையும் அதிகாரிகளையும் விடத்து முதலில் ஆண்டவரை நோக்கி உதவிக்காக கூக்குரலிடுவோம். எமக்கு எந்த வேளையிலும் உதவிக்கரம் நீட்ட ஓடிவருபவர் அவரே.

நாம் எமது உடமைகளை இழந்திருக்கலாம் உடன்பிறப்புக்களை பிரிந்திருக்கலாம், இந்த நேரத்தில் உன்னத தேவனை உதறித்தள்ளக் கூடாது. வீடுகளை இழந்திருக்கலாம் இறைவனில் விசுவாசத்தை இழக்கக்கூடாது. அவர் எமக்காக விரைந்து செயற்படுவார் என்று பங்கு குரு உறுதிபடக் கூறினார்.

# வன்செயல்கள் ஒருபோதும் தீர்வாகமாட்டா

கிறிஸ்தவர்களுக்கு, குடியேற்ற வாசிகளுக்கும் எதிரான தாக்குதல்களை நிறுத்துமாறு இரந்து வேண்டும் போது பாப்பாண்டவர் வன்செயல்கள் ஒருபோதும் தீர்வாகவோ அல்லது விடையாகவோ அமைய மாட்டாது என்று றோமாபுரியில் உள்ள பேதுருவானவர் சதுக்கத்தில் கூடியிருந்த மக்களுக்கு அண்மையில் உரையாற்றும்போது கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறுகையில் குடியேற்றவாசிகள் நாடுகளுக்கு நல்ல வாழ்க்கையை தேடி பல்வேறுபட்ட காரணங்களுக்காக நகர்கின்றார்கள். ஒரு குடியேற்றவாசி மாகாணம், கலாசாரம், மரபு போன்றவற்றுக்கு அப்பால் ஒரு மனிதரே. அவரது உரிமைகளும் கடமைகளும் மதிக்கப்படவேண்டும். விசேடவிதமாக வேலைத்தளங்களில் இவை மதிக்கப்படவேண்டும்.

உலகின் பல்வேறுபட்ட பகுதிகளில் சண்டைகளும் சச்சரவுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்த பயங்கர வன்செயல்களுக்குள் கிறிஸ்தவர்கள் பலிக்கடாக்களாக்கப்படுகின்றனர். நாம் சச்சரவுகளுக்கான மூலகாரணத்தை அறியவேண்டும். மனிதத்தின் அர்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவக்களுக்கு எதிராக அவமதிப்புக்களும் வன்செயல்களும் பல நாடுகளில் அதிகரித்தவண்ணம் உள்ளன.

அரசியல் சமய அமைப்புக்கள் தமது கடமைகளை புறக்கணிக்காது முன்னெடுத்து செல்வது இன்றய காலத்தின் கட்டாய தேவையாகும். கடவுளின் பெயரால் உலகின் எந்த பகுதியிலும் வன்செயல்கள் மேற்கொள்ளப்படக்கூடாது. இவ்வாறு நாம் வன்செயல்களை புரிந்து கொண்டு கடவுளை மதித்து அவருக்கு மரியாதை செய்கின்றோம். எமது சமத்துவத்தையும் மதிக்கின்றோம் என எண்ணுகின்றோம். அது முற்றிலும் தவறான எண்ணமே.

அண்மையில் இத்தாலியின் றோசாமோ நகரில் சுதேச வாசிகளுக்கும் ஆபிரிக்க குடியேற்றவாசிகளுக்கும் இடையில் சண்டை ஒன்று மூண்டுள்ளது. இதில் துப்பாக்கி சூட்டில் ஆபிரிக்கர் பலர் பலிக்கடாக்களாக்கப்பட்டனர். அப்பகுதியில் வன்செயல்களும் பதட்டமும் தொடர்ந்தும் அதிகரிக்க இத்தாலி அரசு 1300 ஆபிரிக்க குடியேற்ற வாசிகள் பஸ்களில் ஏற்றி இடத்தை மாற்றி விடநேர்ந்தது.

எகிப்தில் கிறிஸ்மஸ் பூசையை கொண்டாடிய பின்பு வீடு திரும்பும் வழியில் 6 கிறிஸ்தவர்களும் ஒரு முஸ்லீம் நபரும் துப்பாக்கி சூட்டுக்கு இரையாகி இறக்கநேரிட்டது.

எவருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வன்முறைகள் ஒரு தீர்வாக ஒருபோதும் அமையமாட்டாது. தற்காலத்தில் வன்முறைகளை தவிர்ப்பது மனிதனுக்கே மிகவும் கடினமாக இருக்கிறது. முதலில் ஒருவர் மற்றவருடைய முகத்தை நிமிர்ந்து பார்க்கவேண்டும். அவனுக்கு ஒரு இதயம் இருக்கிறது. ஆன்மா இருக்கிறது. அவனுக்கு பின்னால் ஒரு கதை இருக்கிறது. அவனுக்கென ஒரு வாழ்வு இருக்கின்றது என உணரவேண்டும். அவனும் என்னைப்போல் ஒரு மனிதனே. கடவுள் என்னை அன்புசெய்வது போல் அவனையும் அன்புசெய்கிறார் என்பதை உணரவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

# கொலைகளுக்கு எதிராக இருக்கும் மௌன சுவரை நாம் உடைத்தெறிவோம்

## அதிமேற்றாணியார் ஜீன் செலமன்

தொகுப்பு : ம. பிரான்சிஸ்க்

தமது நாட்டில் அண்மையில் கத்தோலிக்க மக்களுக்கு எதிரான வன்செயல்களை கண்டு மௌனமாக இருக்கும் ஊடகங்களையும் அரசியல் கட்சியின் மந்தப்போக்கிற்கும் எதிராக மிகவும் கடுமையாக ஈராக்கின் பக்டாத் நகர அதிமேற்றாணியார் ஜீன் செலமன் சாடியுள்ளார்.

அண்மையில் அடுத்தடுத்து மொசுலிலும் ஈராக்கிலும் நடைபெற்ற கொலைகளுக்குபின்னர் அவர் ஊடகங்களுக்கு கூறுகையில் கத்தோலிக்க மக்களுக்கு எதிராக ஏவிவிடப்படும் கொலைகளுக்கு எதிராக இருக்கும் மௌன சுவரை நாம் உடைத்தெறிவோம் என பக்டாத் நகர அதிமேற்றாணியார் ஜீன் செலமன் என தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

மொசுலில் கத்தோலிக்கர்கள் கொல்லப்படும் போது அந்த அரசு ஏதும் அறியாதவர்கள் போல் உள்ளது என he told SIR agency அவர் கூறினார். துன்புறுத்தல்களையும் கொலைகளையும் பார்க்காதே, கேட்காதே, அவற்றைப்பற்றி கதைக்காதே என்னும் பயமுறுத்தல்களே அந்த பிரதேசங்களில் தற்போது நிலவி வருகின்றது. இந்த மௌனம் ஊடகங்களின் ஊடாகவே ஊக்கம் ஊட்டப்பட்டு வருகின்றதென்பதை எண்ணும் போது மிகவும் மனவருத்தமாக உள்ளது என்றும் ஊடகங்களும் இந்த கொலைகள் பற்றி மயான மௌனம் காக்கின்றனவே என எண்ணும்போது மனம் வேதனையால் உருகுகின்றது என்றும் அவர் கவலையுடன் தெரிவித்தார்.

இன அரசியலில் கொலைக்கள் கொல்கொதாவில் கத்தோலிக்கர்கள் பலிக்கடாக்களாக்கப் படபோகிறார்கள் என்னும் புதிய அழிவுபாதை மிகவும் அண்மையில் இந்த நாட்டில் தொடங்கப்போகின்றது என அவர் தெரிவித்தார். கடந்த 17.01.2010 அன்று 52 வயதுடைய இருபெண் பிள்ளைகளின் தந்தையான சாடல்லாய் ஜுசிவ் ஜொய்ஸ்-Saadallah Youssif Jorjis என்னும் கத்தேலிக்கர் கொல்லப்பட்டார்

அடுத்த நாள் 45 வயதுடைய அம்ஜாட் 'மீட் அட்டுல்லகாட்-Amjad Hamid Abdullahad என்னும் கத்தேலிக்க வியாபாரி அவரது வீட்டுக்கு முன்பாக சுட்டுக்கொல்லப்பட்டார்.

கிறிஸ்து பிறப்புக் காலத்தில் பல கத்தேலிக்க தேவ ஆலயங்கள் மீது பல்வேறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆத்துடன் கத்தேலிக்கர் மீது கார் குண்டு வெடிப்பு, கத்தேலிக்கர் கடத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதைவிட வேண்டுமென்றே வீடுகளில் புகுந்து கததோலிககர் மீது மூன்று கொலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கடந்த மார்கழி மாதத்தின் தொடக்கத்திலிருந்து இன்றுவரை 10 கிறிஸ தவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். கிறிஸ்தவ மாணவர்களை ஏற்றிச் சென்ற பாடசாலை பேருந்தின் மீது குண்டுவைத்து தகர்த்தப்பட்டுள்ளது.

இவற்றிக்கு தனது அழ்ந்த கவலையை வெளியிட்ட ஈராக்கின் வடபகுதியில் உள்ள கிர்குக் அதிமேற்றாணியாராகிய லூயிஸ் சாகோ இந்த அழிவுகள் இந்த நாட்டின் நன்மை கருதி மிகப்பெரிய இடப்பெயர்வை மேற்கொள்வதற்கே வழிகோலும் என்று தெரிவித்தா. கத்தோலிக்கரை பாதுகாக்க அரசே நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை - 09

புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தமிழ்தூது தனிநாயகம் அடிகள் முத்தமிழ் மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட, தமிழ்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை-09 21-01 2010 அன்று அருட்திரு கி. ஜோ. ஜெயக் குமார் அடிகளாரால் குருத்துவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நிகழ்த்தப்பட்டது.

''போருக்குப்பின்னரான வடகிழக்கு தமிழர்களின் சமூக பொருளாதார பண்பாட்டு விவகாரங்கள்! (ஓர் பல்துறைசார் நோக்கு) என்ற விடயம் பொருளில் இந்த உரை நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வை, அவைத்தலைவர் அருட்திரு. P. ஜெயந்தன் பச்சேக், அ.ம.தி அவர்கள் தலைமை தாங்கினார்.

நிறை அறிவும் பல்வேறு பங்குப் பணித்தள அனுபவங்களும், இன்னும் பதின்மூன்று ஆண்டுகளாக யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தில் பணியாற்றிய அருட்தந்தை கி.ஜோ. ஜெயக்குமார் அடிகள் தனது விடயப் பரப்பை சிறப்பாக அலசியிருந்தார். போரிற்கான ஆணிவேர்களையும் சமூக அமைப்பின் போக்குகளையும் இன்றைய நிலையின் யதார்த்தத்தையும் சிறப்பாக விளக்கி பல்வேறுபட்ட சந்தேகங்களுக்கும் விடை அளித்தார்.

தனது உரையில் இறுதியாக ''போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலை இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் ஜேர்மனியில் யப்பானில் வாழ்ந்த மக்களின் மன



நிலை போன்று இருக்க வேண்டும். அத்துடன் இந்த வரலாற்றுத் தடத்தில் நிற்கும் தமிழ் சமூகம் ஒன்றிணைந்து உரையை நிறைவாக்கினார். அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் இதில் பங்கு பற்றி பயன்பெற்றனர்.

## வன்னி மறைக்கோட்டத்தின்... 1ம் பக்கத் தொடர்ச்சி

பற்றைகளாக எல்லாம் அழிந்து வீடுகள், மரங் கள், தென்னைகள் கொடிய ஷெல் வீச்சால் அழிந்து அலங்கோலமாக காட்சியளிக்கின்றன.

பின்னர் ஆனந்தபுரம் புனித செபஸ்ரியார் ஆலயமும் கூரைகளும் உடைந்தும் ஆலய சுவர்கள் துளைக்கப்பட்டும் காணப்பட்டன. இரணப்பாலை புனித பத்திமா அன்னை ஆலயம், குழந்தை இயேசு ஆலயம் என்பன உடைந்தும் கூரைகள் இல்லாமலும காணப்படுகின்றன.

யுத்தத்தின் கடைசிக்கட்டமான மாத்தளன் பகுதிகளில் மக்களின் சைக்கிள்கள், வாகனங்கள் குவிக்கப்பட்டு காட்சியளித்தன. மாத்தளன் மரியாள் ஆலயமும் பல பாதிப்புக்கு உள்ளாகி அவ் ஆலய பீடப்பகுதி முற்றாக இல்லாமல் அழிந்து காணப்பட்டது.

இக்கொடிய மனதை உருக்கும் காட்சிகளை பார்க்கும் போது எம் மக்களின் துயரம், சாவு என்பன எப்படி அமைந்திருக்கும் என்பதையும் சிந்திக்க வைக்கின்றது.

## நூல்தொகுப்பு

தற்போதைய நாவாந்துறைப் பங்குத் தந்தை அருட்பணி பா.பீ. இராசசிங்கம் அடிகள் "திருமுக தரிசனம்" என்ற திருப்பாடுகளின் தியானத் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார் .

# இறைபதமடைந்தார்

யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. யோசவ் கமலானந்தன் அடிகளின் அன்புத்தாயார் திருமதி யோசவ் மருசலீனம்மா அவர்கள் 23.01.2010 அன்று தனது 75வது வயதில் காலமானார். அன்னாரின் இறுதிச் சடங்கு தமது பங்காகிய இளவாலை சென் ஜேம்ஸ் ஆலயத்தில் 25.01.2010 அன்று நடைபெற்று உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்தந்தை அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் காவலன் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

# கெபித் திருநாள் மாசி – 11

யாழ் தேவாலய வீதியில் (Temple Road) உள்ள செபமாலைத்தாசர் சபையின் ஆச்சிரமத்தில் அமைந்துள்ள லூர்து அன்னை கெபித் திருநாள் 11.02.2010 அன்று கொண்டாடப் படவுள்ளது. அன்று மாலை 4.00 மணிக்கு திருச்செபமாலையும் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் ஆசீரும் பெருவிழா திருப்பலியும் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2010 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org